செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௮ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௪, கார்த்திகை டிசம்பர், 1953 | பரல் ௪

# ஔவையார் திரைப்படம்

ஔவையார் வரலாற்றுத் திரைப்படம் 'செமினி' திரைப் படநிலையத்தாரால் இசைச் செல்வி திருவாட்டியார் கே. பி. சுந்தராம்பாளைக் கொண்டு ஔவையார் கோலந்தாங்கி நடிக்கச் செய்து பெரும் பொருட்செலவில் எடுக்கப்பட்டது. இது நாடெங்கும் திரையரங்கங்களில் காட்சியளிக்கின்றது.

இதனைப் பார்த்த சில அன்பர்கள், சிறந்த முறையில் ஔவையார் வரலாற்றை விளக்கும் படம், பார்த்தற்குரியது என என்னிடம் பகர்ந்தனர்.

இப்படம் சென்னையில் 'பிரபாத்து' 'வெலிங்டன்' முதலிய திரைப்பட அரங்கங்களில் தொடர்ந்து நூறு நாட்களுக்கு மேலாகியும் ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் நான் இதனைக் காணச் சென்றேன். பிரபாத்து அரங்கிற் பார்த்தேன்.

ஔவை மூதாட்டியார் வரலாற்றில் பல பிழைபட்ட கருத்துக்களைத் திணித்துப் புகுத்து அமைத்திருப்பதைக் கண்டு அகம் வருந்திற்று; என் கண்கள், அக் காட்சிகளைக் காணவும் கூசின.

அதில், திருவள்ளுவர் திருக்குறள் நூல் அரங்கேற்றம் வருகின்றது. ஔவையாரே அதனை அரங்கேற்றற்குத் திருவள்ளுவரை வற்புறுத்தி அழைத்துச் செல்கிறார். மதுரைச் சங்கத்தில் அரங்கேற்றம் நிகழ்கின்றது. உலகத்துக்கே அறிவு ஞாயிறாக இலங்கும் திருக்குறளை ஆக்கி உதவியருளிய திருவள்ளுவரை, இப்படத்தில் ஓர் அறிவற்ற மக்காகக் காட்டியிருப்பது, தமிழரையே மானக்கேடு செய்வதாக வுள்ளது. தமிழ்ச்சங்கம்

வைத்துத் தமிழ்மொழியை வளனுற வளர்க்கும் பாண்டியனைப், புலவர்களைக் கண்டால் மல்லுக்கட்டும் மடையனாக ஆக்கி, ஔவையாரை வரவேற்காமல் புறக்கணித் தொதுக்குவது போன்று காட்டியிருப்பதும் வரலாற்றுக்கு முரண்பட்ட செய்தியாகும்.

இன்னும் ஔவையார் வரலாற்றில் உள்ள நிகழ்ச்சிகளில் முதன்மையானவும், சங்ககால நூல்களில் இடம்பெற்றுள்ளனவுமான தொண்டைமான்பால் தூது சென்ற வரலாறும், அதியமான் நெடுமான் அஞ்சிபால் கருநெல்லிக்கனி பெற்ற வரலாறும் ஏனோ சேர்க்கப்பெறவில்லை! இவை உலகியல் வழக்கிலும் மிகுப் பயில்வன.

ஔவையார் நெடுமான் அஞ்சியால் தூதுவிடுக்கப்பெற்றுத் தொண்டைமானுழைச் சென்றபோது, அவன், ஔவையார் பெருமையை உணரானாய்த் தருக்குக்கொண்டு தன் படைக்கலப் பெருமையை ஔவையாருக்குக் காட்ட எண்ணினான்; அதைக்கண்டு அஞ்சி, அஞ்சிக்கும் அச்சமுண்டாக்குவார் எனவும் கருதினான். படைக்கலக் கொட்டிலை (ஆயுதசாலையை)த் திறப்பித்துக் காட்டினான். ஔவையார் அதனை உணராதவர்? அவர் தமிழ்நெஞ்சம் அதைக் கண்டு நகைப்புக் கொண்டது. அஃது ஓர் பாவாக மலர்ந்தது. அது வரலாற்றை இன்று காட்டும் பெருவிளக்காக நின்றொளிர்கின்றது. அது:

[1] 'இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே, அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ! என்றும்
உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே'

என்பது. இதில், 'இந்தப்படைகள் மயிலிறகுகள் அணிந்து, பூமாலைகள் புனைந்து, தன் இடம் திரண்ட வலிய பிடிகள் அழகுபட அமைத்து, எண்ணெய் தடவிக், காவலையுடைய அகன்ற கட்டிடத்தின்கண் வைத்துப் பூட்டப் பெற்றுள்ளன. எம் வேந்தன் கூரிய படைகளோ பகைவர்களைக் குத்தி, அதன் பக்கமும் நுனியும் முறிந்து, கொல்லனது பணிக்களக் களரியாகிய குறிய இடத்திலேயே கிடக்கின்றன!' என்று கூறுவதில்

1. புறம்: ௯௫.

ஔவையாரின், நெஞ்சத்திண்மையும், அரசனையும் மதியா ஆண்மையும் சிறந்தொளிரவதைக் காணலாம. இதனைச் சுந்தராம்பாளைக் கொண்டு இசையோடு பாடுவித்துப பொருளையும் விளக்கமாகச் சொல்லும்படி செய்திருப்பின், எவ்வளவு சுவையாக அவையினரை மகிழ்விக்கும தூதுவராம அருந்தமிழ் அன்னை ஔவையாரின ஆற்றலும உலகெங்கும பரவும.

கருநெல்லிக்கனி அதியமான் அருசியால் பெற்றுத் தாம் இனிது வாழ்ந்திருந்ததை ஔவையாரே தாம் பாடியருளிய 'வலம்படு வாய்வாள' என்னும பாடலில்,

"[1] சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச
சாதல் நீங்க எமக்கீத் தனையே'

என்று குறிப்பிடுகின்றனா.

இவைகளையெல்லாம ஔவையார் படத்தில் மறைத்தது எதுக்கக் காரணமென்னையோ? உண்மையை நாட்டுமக்கள் உணரலாகாதென்ற கருத்தா?

இவைகட்கு மறுதலையாக, ஔவையாா வரலாற்றில் இல்லாத புனைகதையாக ஆக்கிப பாரிமகளிர் இருவர்க்கும காதலன ஒருவனைபபடைத்து, அவன் சிறைபபட்டதாகக் கற்பனை செய்து, அதற்குப் பிள்ளையார் ஏவலால் பலயானைகள சிறையரணைத் தகர்த்து அவனை மீட்டுக்கொண்டு வந்ததாக ஔவையார் வரலாற்றைச் சிதைத்துப் புராணக் கதையாக ஆக்கி இருக்கின்றனா. அறிவியலுக்குப் பொருந்தாதவை பிற்காலத்தெழுந்த புராணங்களிலேயே மண்டிக்கிடக்கின்றன. ஔவையார் புராண காலத்துக்கு மிகமிக முற்பட்டவர் சங்ககால ஔவையார் வேறு ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்கள் ஆக்கிய ஔவையாா வேறு. இவைகளை ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்து உண்மையறிதல வேண்டும் இவ்விரு ஔவையாரையும் ஒன்றாகபபிணைத்து, இப்படத்துக்கென மற்றொரு ஔவையாரையும கொண்டுவந்து காட்டுகின்றது, இத்திரைபபட நிலையம்.

இக்கதையைப் படமெடுத்தோா தமிழ நூற்களைக் கற்றுத் துறைபோய நல்ல அறிஞரைககொண்டு அமைத்திருந்தால் நடுநிலைதிறமபா யாரொருவரும வெறுத்தற்கேலாத மேன்மதிப்புக்குரியதாக இருந்திருக்கும். அதை உணராததால், இபபடம தமிழ்நூல் கற்ற—வரலாறறிந்த—அறிஞர்களால் வெறுக்கப பெறலாயிற்று. பட முதலாளிகள் பொருள்வருவாயை மட்டும்

1. புறம். ௯௧

கருதலாகாது குறிக்கோளாக நாட்டு நன்னலனும் கருதுதல் வேண்டும். தன்னுரிமைபெற்ற நாடுகளிலெல்லாம், நாட்டின் நலங்கருதியே படமெடுக்கப்படுதலைக் காண்கின்றோம், கேட்கின்றோம், படிக்கின்றோம்.

தமிழ்நாட்டின் தலைவிதிபோலும்! எதை யெடுத்தாலும் முரண்பாடும், எதிர்ப்பும்! தமிழிசையா? வேண்டா, தமிழில் இசைப்பாட்டுக்கள் இல்லை, தெலுங்குப்பாடலே இருக்கலாம்; போதும்! தனித்தமிழா? கூடாது. அது மொழி வெறிகொண்டார் செயல். தமிழ் தனித்தியங்காது என்ற கூக்குரல், அதற்குப் படையெடுப்பு! அதனால் கலைக்கும் மொழிக்கும் நேர்ந்த—நேரும் கெடுதலை அறிவோர் இல்லை, அறியார்! அறியார்!

தமிழரை இகழ்ந்த கனகவிசயர் தம் முடித்தலைநெரிய இமயக்கற்கொணர்ந்த தமிழ்நாடே! தமிழ்மொழியறியா ஆரியன் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்திய தமிழ்நாடே! நீ யாண்டுளாய்! யாண்டுளாய்! எனக் கூறி வருந்துகின்றேம்! எதை யெடுத்தாலும் நடுநிலைதிறம்பி முறையின்றி எதிர்க்கும் எதிர்ப்பும் முரண்பாடும் நம் நாட்டைவிட்டு அடியோடு அகறல் வேண்டும். அன்றே நம்நாடு நன்னாடாக மிளிரும்.

இவ்வாறான பிழைபொதிந்த கருத்துக்கள்கொண்ட திரைப்படம் நாட்டில் நடமாட வரும்போது அவ்வம் மாநில அரசினரும் திரைப்படத்தணிகைக் குழு(Censor Board)வினரும் அதனை நன்கு அலசி ஆய்ந்தே வெளியிட இசைவுதருதல் வேண்டும்.

ஆனால் நம் சென்னைமாநில அரசு, கூட்டுமொழி அரசு! அங்ஙனமாயினும் அவ்வம் மொழியை அதனதன் சிறப்பு முறையில் நோக்கலே அறமுறை. அது இவ்வாறான செயல்களைக்கண்டு திருத்துவதுமில்லை, திருத்தாவிடின் பொதுமக்கள் மெய்வரலாறுணராது விழிப்பர்! அதற்கு அஞ்சுவதுமில்லை, அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்பதை உணர்வதன்றோ கடன்; அஃதன்றித் தமிழ் ஆக்கத்துக்கும், நாகரிகத்துக்கும், வளர்ச்சிக்கும் இடந்தாராததாயும் உள்ளது. ஆந்திரநாடு தனியே பிரிந்து சென்றும், ஏனைய பிரிய ஒருப்பட்டு நிற்கத், தமிழ்நாடு தனிநாடு என்று கூறக்கூட அதற்கு மனம் ஒவ்வாமல், 'எஞ்சிய சென்னை மாகாணம்' என்றே கூறுவதில் மகிழுமாயின் என் கூறுவது! அந்தோ! தமிழரசே! தமிழகமே!

நீ உன் கடமையைக் கைநெகிழவிடுதல் சான்றாண்மையாமா? அறமா? எண்ணிப்பார்

இத்தகைய தமிழ்ப்படம் வருங்கால் நீ என்ன செய்தல் வேண்டும்? தமிழ்மொழியை நன்கு கற்றுத் தமிழில் உண்மையான பற்றுக்கொண்ட—நடுவுநிலை திறம்பாத—தமிழப் புலவர்களைக்கொண்டு அவைகளை உருவாக்குதல் வேண்டும். அன்றி அவைகளை நன்கு கண்காணிக்கச்செய்து, அவர்கள் உண்மையானவை என்று கூறுபவற்றையே நாட்டில் பரவவிடுதல் வேண்டும் அரசு அமைவது அவ்வந்நாட்டு வரலாறு, கலை, நாகரிகம், பண்பு, மொழி, ஒழுக்கம் முதலியவற்றைப் பாதுகாத்தற்கேயாம். இவைகளைப் பாதுகாக்க ஒருப்படாது ஒதுங்கி நிற்கும் அரசுக்கு நாட்டில் உண்மையான மதிப்பு ஏற்படுமா? வரலாற்றுக்கு மாறுபட்டவைகளைக் களையாது 'யாருக்கு வந்த விருந்தோ' என்று வாளா இருப்பது, ஆட்சியின் அமைவும் அறமுறையும் ஆகாது.

¹'மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றும்'

எனவும்,

²'ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'

எனவும்,

³'எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்'

எனவும் முழங்கும் தமிழ் அருமறை மொழிகளை ஈண்டு அரசினருக்கு எடுத்துக்கூற விழைகின்றோம்.

இப்படத்தில் முழுதும் பிள்ளையாருக்கே முதன்மை கொடுப்பதற்கு வரலாற்றையே திருத்தியிருப்பது, மிகமிக வருந்தற்குரிய தொன்றாதலோடு, கடவுள் தன்மையை இழிவுபடுத்துவதுமாகும். கோட்டையைத் தகர்க்கப் பிள்ளையார், யானைகளை ஏவிவிடுவது, கடவுளின் அரும்பெறல் ஆற்றலின்மையை உணர்த்துமே தவிர, ஆற்றல் மிகுதியை உணர்த்தாது. இதனால் மக்களிடையே கடவுட்பத்தியை உண்டாக்கவும் ஒல்லாது. அதற்குமாறாகக் கடவுள்பால் உள்ள நம்பிக்கையைக் குறைக்கக் கூடியதுமாகும்.

நாட்டில் கடவுட்பத்தியை வளர்க்க விரும்பினால், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், திருவரங்கம், திருவேங்கடம் முதலிய கடவுள் திருத்தலங்கட்குச் சென்று அங்கு நிகழும் திருவிழாக்காலங்களில் மக்கட்கூட்டம், தேரோட்டம், கடவுள் திருவுலாப்போதல் முதலிய நிகழ்ச்சிகளை ஒளி

1 மணிமேகலை. 2, 3, திருக்குறள்: ௫௪௧, ௮

யமைப்புடன் படமெடுத்துத் தனிப்படமாகவோ, அன்றிப் படங்களின் இடை நிகழ்ச்சியாகவோ காட்டுதலே படத்தொழி லாளர கடமையாகும். அவ்வாறே செய்தற்குப படத்தொழி லாளர் முன் வருதலவேண்டும.

இப்படத்தைப் பொறுத்த வரையில் ஒலியமைப்பு, ஒளிப் பதிவுகள் நன்கமைந்துள்ளன. பாண்டியனைத் தவிரச் சில அரசர் கள் ஔவையாரை வரவேற்கும் காட்சி முதலியன வியததற் குரியன ஆகும் பேய்வடிவாக வநத மங்கை, தன் வரலாறு கூறும பகுதியில் அவ்வரலாற்றின் உருவமும பார்ப்பவர் காணுமாறு அமைத்துள்ள முறை பாராட்டுந்தகையது.

தமிழ்ப் பெருமக்களே! இவ்வாறு காலநதோறும நம் புலவர் பெருமக்கள, வள்ளல்கள, அரசாகள் வரலாறுகள் சிதைக்கபபட்டு வருவதாலதான அவாகளின் உணமை வரலாறு களை நன்கு தெரிநது தெளிதற் கியலாவாறு மொட்டைத் தலைக்கும் முழஙகாலுக்கும முடிசசுப்போடுவதுபோல, திருவள் ளுவர் போன்ற பேரறிஞர்களின் வரலாறறை யெல்லாம அக் காலத்துககும இக்காலத்துக்குமாக மாற்றித தொலைததனர்; இன்றும் இபபடிக் கெடுக்கின்றனர்.

இத்தகைய மாறுபட்ட படங்கள் திரையரங்கில் வருங்கால், அவைகளை நீங்கள் புறக்கணிதது ஒதுக்குங்கள்! இவவாறுய நாட்டுக்கு முறைகேடுசெய்யும படங்களை உங்கள் கண்ணுற் பாராது அபபட முதலாளிகட்கு நல்லறிவு புகட்டுஙகள். அவ்வாறு செய்யின், படமுதலாளிகள் திருநதுவர் நாட்டுக்கு இத்தகைய படங்களை வெளிக்கொணரரா. பொய்யும் புரணும் புனைவும கூடிய வரலாறுகள் நூலிலும் இடம் பெறுதல் ஆகாது. அதுவும தீது. அதனினும மிககதீது திரைப்படததில் தோனறுவது! என்னை? நூலினைக்கற்பாரும கட்டுரைப்பாரும் ஒருசிலரே! படககாட்சியோ எல்லாமககளும் கண்டு பிறர்க் குரைத்து மெய்யென நமபிப் பிழைபட ஏதுவாகுமாகலின். மேலும் அவர்கள் உண்மை வரலாற்றை உணர்த்துவாரையும் தம் பிழையுணர்வால மறுப்பர். உண்மையுணாத்த வேண்டுவது கடனறி காட்சியர் அறனும் நல்ல உண்மை வரலாற்றோடு கூடிய படங்கள் வரலாம் அதனால் நம் நாட்டுப பண்பும் கலையும் மொழியும் உயர்ந்து உலகு வழிகாட்டியாக மிளிரும் எனக்கூறி அவ்வாறே செய்ய நுங்களைப் பெரிதும வேண்டுகின்றேம.

—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை.

# *வான்கோழியும் வன எறும்பும்

[கோபாலை, திரு. வே. பெருமாள்]

தன்பெருங் குற்றம் தவறென நினையா
மன்பிற ரற்றம் மதிக்கும் பெரிதாய
இன்றமி ழன்பீர்! நன்றிதை யுணர்வீர்
கிருத்துப் பண்டிகை விருந்து விழாக்கள்
பெருத்து நடக்கும் பின்வரு நாளை
கருத்துட் கொண்டவான் கோழி கவலால்
வெறுத்தது உண்டியை வெறுத்தது உறையுளை
துறந்தது நாட்டைத் திரிந்தது காட்டில
அதன்பின் இனங்களும் அடர்ந்து சென்றன.
செல்லும் வழியில நில்லா திரைகளைப
பல்வகை முறையில பரந்து சேர்த்தன,
தாயக்கோழி தன்னுடை சேயக—கோழி தன்னை,
"வீரா என்சிறு வீரக் குஞ்சே!
வருவீ ரென்ற னண்மை வருவீர்.
கருப்புத் தரையெனக் காட்சி காட்டும்
எச்சிறு இடங்களும் எறும்பி னீட்டம்
இதனால், இச்சிறு வனம்நாம் நச்சுதற் குரித்தே
எண்ண வியலா எறும்பின் கூட்டம்
எண்ணிய படிநாம் எவர்பொறை இன்றியும்
கண்ணிய மாகக் காலம் போக்கலாம்.
என்னே! மகிழ்வு; என்னே! மகிழ்வு,
கொன்னே இந்திரன் உலகம் என்பதே;
எத்துணை மகிழ்வை ஏற்பினு மென்பயன்
எத்தனை வகையால் எம்முடல் நாளை
விருந்திற் கறியாய் வைப்பான் பாவி!
பெருநர கக்குழி பேயன் போவன்
என்னே? மாந்தர் எங்க ளுடலை
கொன்றே தின்று வளர்ப்பார் தம்முடல்
மன்னா! இறைவா முறையோ இந்நெறி
என்னைக் கொல்லும் திண்ணா எப்பயன்
எய்துவர்? எய்துவர்? ஈசா நீசொல்."
குய்யஞ் செய்யும் கோழி யிவ்விதம்
தன்குறை யோரா பிறர்குறை யியம்பும்
நன்னே ரமங்கு நடந்தவன எறும்பு
சற்றே தூரம் சார்ந்து நின்று,

---

* புலவர் Ray எழுதிய "The turkey and the ant" என்னும் ஆங்கிலச்செய்யுளின் மொழிபெயர்ப்பு.

“கற்றாய் கோழி! முற்று அறிவை ;
உன்னைக் கொல்லும் நல்லவா தம்மை
கொன்னே பழிமொழி கூறினை நன்றே
என்னைக் கொல்லும் நின்னை யெவ்விதம்
மன்னும் வசைகள் மொழிவது சொல்வாய் ”
என்றே கூறிச் சென்றது மன்னே.
நன்றாய உணர்வீர் நற்றமிழ் நாட்டீர் !
தன்பெருங் குற்றம் கொன்னே மறந்து
நன்பிற ரற்றம் நாடா தொழிவீர் ;
நன்னெறி நாமே நடந்து காட்டி
பொன்னோ மக்களை யவ்வழி யூட்டி
நற்றம் யாவரும் சுற்றம் கொண்டு
நித்தம் வாழ நிமலனை நினைமின் ;
உண்மை, வாய்மை, மெய்ம்மை யென்பதை
கொண்டே நாட்டில் குலவிடு வீரே.

**கதைச் சுருக்கம் :**—வான்கோழி ஒருநாள் தன் உண்டி உறையுள் முதலியவற்றை வெறுத்தது காட்டை நோக்கிப் புறப்பட்டது. அதன் மனைமக்களும் பின்தொடர்ந்தன. காட்டில் ஓரிடத்தில் வன் எறும்புகள் அதிகமாய் வசித்துவந்தன. தனக்கு வன்எறும்புகள் உவந்த உணவாக நிறைந்து வசிப்பதைக் கண்டு வான்கோழி பெரிதும் மகிழ்ந்தது. தன் மனைவி மக்களைத் தன்னருகே அழைத்தது.

ஐயோ! எவ்வளவு வசதியாய் இந்த இடத்தில், பிறர் பொறாமை, கவலை முதலியன இன்றி வாழலாம். நம் உணவிற்கு வேண்டிய எறும்புகள் எண்ணற்றனவாய் வளர்கின்றன. ஆனால், நாளை கிருத்துப் பண்டிகையில் எம்முடல் எத்தனையோ விதமான கறிகளாகச் சமைக்கப்படுமே அந்தோ! அப்பாவிகளுக்கு என்ன கதி கொடுப்பாயோ? இறைவா! நீயே கதி. என்னூனைத் தின்றுதானா அப்பாவிகள் ஊனை வளர்க்கவேண்டும் என்று பலவாறாய் நிந்தித்துக்கொண்டிருந்தது.

பக்கத்தில் சென்றுகொண்டிருந்த எறும்பு சற்று நின்றது. “தான் செய்கொடுமை நினையாது பிறரைப்பற்றி நிந்திக்கும் கோழியே! உன்னைக் கொல்லும் மக்களை இவ்விதம் பழிமொழி கூறினாய் என்னைக் கொல்லும் நின்னை எவ்வாறு நிந்திப்பது?” என்று சொல்லிச் சென்றது.

இதனால், நல்ல நாட்டில் பிறந்த உயர் மக்களே! முதலில் நாம் செம்மையாய் நடப்போம் பின்னர்ப் பிறரையும் அவ்வழி நடக்கச் செய்வோம். தாமே நன்னெறி விட்டிருக்கையில் தம் போன்ற பிறரை ஏன் அந்நெறியில் தூற்றவேண்டும்?

# சிறுதேர்

[வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன்]

### தமிழுலகின் முன்

தமிழ்நாடு கலைவளம் பெருகிய திருநாடு. கலைவளம் நிலை கொண்டு மிளிரும் கல்லோவியங்களும் சொல்லோவியங்களும் இத்திருநாட்டில் நிரம்ப உண்டு; அவற்றால் பண்டைக்காலப் பண்பாட்டை அறிகிறோம்; மக்களது மனவளர்ச்சியை அறிகிறோம்; கலைஉணர்ச்சியின் உச்சியைக் காண்கிறோம்; கண்டு நம்மை மறக்கிறோம். பரந்து விரிந்த இப்பாருலகை மறக்கிறோம்; உலகை மறந்த நாம் கலையோடு ஒன்றுபட்டு விடுகிறோம்; செந்தமிழ் இலக்கியம் செய்யும் இந்திரசாலம் இது!

எண்வரம்பில்லாத ஆண்டுகளுக்கு முன்னே எழுந்த நம் இலக்கியவாணர்கள் இன்பத் தேனூறும் இனிமைப் பாட்டிசைத்தார்கள். அந்தப் பாட்டுக்கள் வெறும் சொற்கூட்டங்களில்லை, உள்ளத்தைக் கவியுருவமாக வார்த்தெடுக்கும் உருக்குத் தொழிற்சாலைகள் அவை. அங்கே மக்களது மனம், அறிவு இவற்றை நாம் காணமுடிகிறது; மனமும் அறிவும் மாண்புற எழுப்பும் கலைக்கோயிலைக் காணமுடிகிறது. அந்தக் கலைக் கோயிலிலே எழும்பும் அமுத இசையையும் கேட்கமுடிகிறது. அந்த இன்ப அனுபவந்தரும் பாடல்கள்தான் வாழ்க்கைப் பயணத்தில் இடையிடை தோன்றும் இன்ப அன்பு நிலையங்கள்!

குறுந்தொகையிலே ஒரு பாடல்; வண்டை விளித்து வளமான கருத்தை வாயாரப்பாடிய வண்டமிழ் வாணர்—அதனால் மறந்துபோன தமிழகத்துக்குத் தம்பெயரை இன்றளவும் நின்று நிலைக்கும்படி செய்துகொண்ட செந்தமிழ்ப் பாவலர் தும்பிசேர்கீரனார்—சுருங்கிய நடையில் பெருகியபொருளைச் சொல்லிவைத்த இனிய பாடல், அதைத் தமிழர் ஊன்றி அறிய வேண்டும்; அத்தகைய நுணுகிய கருத்து நிறைந்த அப்பாடல் புதுமெருகிடப்பெற்று இங்குத் தமிழுலகத்தின்முன் தரப்படுகின்றது.

### எழுந்த காதல்

அவர்கள் பிறந்தது அந்தச் சிறிய ஊரில்தான். ஊர் முல்லை மொட்டைப்போலச் சிறிதாயினும் வளத்தில் பெரியது. அவன் தந்தை ஓர் செல்வர். செல்வந்தர் வீட்டுச் செல்வக் குமரன் அவன். அவள் மட்டும் என்ன? பணக்காரர் வீட்டுப்

பாவைதான் அவளும். இளமைப் பருவம் இருவரிடையேயும் எட்டிப்பார்த்தது.

பருவம என்ற சிற்பி அவளது மேனித் திரையிலே மென்மை என்ற எழுதுகோலால வண்ண ஒவியம வரைந்தான். பூவையின் அழகும, மயிலின சாயலும, குயிலின குரலும், அன்னத்தின் நடையும் அஞ்சுகத்தின் மொழியும் அவளுக்குப் பருவச் சிற்பி தந்த பரிசுகள் அவன் அஃதோடு விடவில்லை; அவனைக் காளையாக்கினன்; கட்டான உடல், கனிவான உள்ளம்; அரும்பு மீசை; ஆசைப் பார்வை, இத்தனையும் தந்தான் அழகு ஆண்மைக்கு மாலையிட்டது, உள்ளம் 'செம்புலப் பெயல்நீர் போல'க் கலந்தது, இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்தது

பெற்றோரறிந்தனர்—மனமொத்த மக்களை மனைவாழ்வில் புகுத்தினா. அவளும் அவனும் ஊரறிய இல்வாழ்வை உவகையொடு நடத்தினர். அவர்களது வாழ்க்கைப்படகு அமுதக் கடலில் மெல்ல மிதந்தது.

பிரிவும் பரிவும்

இடையறாத இன்பம் சிறக்காது, கூடிய வாழ்வு சிறப்புறாது. இது நியதி. இன்பத்தில மிதந்த அவர்களிடை இடர் தலை நீட்டியது. உழைக்காமல் வாழ ஒவ்வாத அவன், உழைத்துப் பொருள் தேடிவர உளங்கொண்டான.

'முன்னோர் வைத்த பொருளை வைத்தே முயற்சியின்றி வாழ்தல் தவறு; தன்னுடைய உழைப்பால் விளைந்த ஒண்பொருளே இல்வாழ்வுக்கேற்றது' என்ற கருத்து மக்களிடத்தில் மலகியிருந்த காலம் அது. ஆடவர் இந்தக் காரணத்தால் தத்தம் அரிவையரைவிட்டுப் பிரிந்தனர். இந்தக் காரணம்—ஆடவரது உழைப்பால் வந்த ஊதியமே இல்வாழ்வுக்குகந்தது என்ற எண்ணம் அக்காலப் பெண்டிர்க்கும தெரிந்திருந்தது.

தன் கணவன் பொருள்வயிற் பிரிந்துவிட்டானே என்று கண்ணீர் வெள்ளத்தில் கலங்கித் தவிக்கும் ஒரு தலைவியை அவளின் ஆருயிர்த்தோழி ஆற்றுவிக்கும தமிழருமையைப் பாருங்கள் :

"நாள்தோறும் தன்னுடைய முயற்சி முடங்கிக் கிடக்க வீட்டினுள்ளேயே இருந்து முன்னோர் வைத்த பொருளைக் கொண்டே வாழ்க்கையை நடத்தும் வீணர்க்குப் புகழ் இல்லை என்று கருதியே நம் தலைவர் பிரிந்தார்; உன் கண்ணீர் வெள்

ளத்துக்கு அணையிட்டு அகமகிழ்வாயாக" என்றாளாம் தோழி[1]

இவ்வாறு உழைத்த பொருள்கொண்டு உயர்ந்த வாழ்வு வாழ விரும்பிய அவனும் அவளைவிட்டு அரும்பொருளைத் தேடப் பிரிந்தான். தலைவி இடர்க் கடலில் வீழ்ந்தாள்; தோழியின் தேற்றுதலுரைகள் இல்லாவிட்டால் அவள் அந்தப் பெருங்கடலில் இருந்து தப்பியிருக்க முடியாது.

தமிழிலக்கியங்களிலெல்லாம் தவறாது காட்சி தரும் இந்தத் தோழி என்பவள், கவிஞர்களின் கற்பனைக்கு ஓர் அளவுகோல் போல அவளது பேச்சிலே ஒருசமயம் சமவெளி நதி அமைதியோடு செல்லும்; மற்றொரு சமயம் காட்டாற்று வெள்ளம் கரைகாணாது ஓடும். ஒருபோது மலரின் மென்மை தலைகாட்டும். மற்றொருவேளை மலையின் வன்மை தலையெடுக்கும். இவ்வாறு அன்பான உரைகளும் ஆத்திரமான பேச்சுக்களும் அள்ளி வழங்கும் தோழியே தலைவனது பிரிவுக் காலங்களிலெல்லாம் பெருந்துணையாயிருந்து தலைவியை வாழ வைப்பாள்.

இத்தகைய தோழியின் துணையால்தான் அவள் அவனது பிரிவைச் சகிக்க முடிந்தது. தோழியின் குறுகுறுத்த கண்களும் குறும்பான பேச்சும் தலைவனைப் பிரிந்த அவளுக்குத் தக்க துணை புரிந்தன.

**வந்துமா துன்பம்!**

பொருள் தேடப்போன பொற்கொடியின் காதலன் ஊருக்கு வந்தான். மீண்டும் இருவர் இல்வாழ்க்கைப் படகும் அன்புத் தென்றல் வீச அமைதியோடு உலவத் தொடங்கியது.

காலதேவனின் சக்கரம் சுழன்றது. இருவரிடையேயும் இருந்த அன்பில்—கொஞ்சம் பிளவு - ஒரு குடப்பாலில்,—ஒரு சிறு மோர்த்துளி, கலந்தது.

நீரில் நெடுநேரம் குளித்தவரின் கண்கள் சிவக்கத்தானே செய்யும்; அவ்வளவு ஏன்? பழகப் பழகப் பாலும் தேனும் கைத்தல் இயல்புதானே.[2]

---

1. "நாளும் நாளும் ஆள்வினை அழுங்க
இல்லிருந்து மகிழ்வோற் கில்லையாற் புகழென
ஒண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடை இனித் தோழி நீயே." —(சிற்றெட்டகம்)

2. "நீர்நீ டாடிற் கண்ணும் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்."
—குறுந்தொகை : ௩௫௪.

தலைவன் மட்டும் இந்நியதிக்கு விலக்கானவன் அல்லன். அவளை மறந்தான் முன்போல அலுவலுக்குச் சென்ற அவன் அந்திவேளையில் கையில் முல்லைச் சரத்தோடு அகம திரும்புவதில்லை.

முழுமதி நிலவைக் கண்டதும் முன்போல, குறுங்காற் கட்டிலில அவளொடும் அமராநது, காதறபேசசுகள பேசிக் களிபபோடிருக்க முன்வருவதில்லை

அவனது இந்த மாறுபாட்டைக் கண்டு அஞ்சினள் அவள். தோழியைத் தருவினாள். துபபறியச் சொன்னாள! நுண்மாண் நுழைபுலம் மிக்க தோழியா விடுபவள்? பன்னாள் முயன்றாள. இறுதியில் தலைவன வேறொரு பரததைபால் விருப்பம் கொண்டு வாழ்வது அவளுக்குத் தெரிநதது, அசந்து போனாள்.

'நிறைந்து வழியும் தேனை உடைய பெரியதாமரை மலரை விட்டு, குறைந்த தேன்துளியை உடைய குவளைமலரை அடைகின்ற வண்டைப்போன்றவா ஆடவா'

என்பது தலைவன் பால் உண்மையாயிற்றே என ஏஙகினாள், மெல்லமெல்லத தலைவியிடததில சொன்னாள, தலைவி தவிததாள். திருமணததின்போது 'பிரியேன்—பிரியினுமு தரியேன்' என உறுதிதநத தன் அன்புககுரிய காதலன் அணைத்தலையை நீககிவிட்டான் என்று தலைவி நினைத்தாள்

உண்மையில், மனிதகுலததில் ஆண்மக்களுக்கு உரிய பெருங்குறை ஒன்றே ஒன்றுதான். அஃது எனனவென்றால தன மனைவி பிறரோடு பேசாமல தடுபபது, அப்படிப பேசினால் தவறாக நினைபபது; சிறைவைததுக காப்பது. ஆனால் அதே ஆண்குலம தன்னுடைய போக்கில் மட்டும் இததவறுகளைப் பொருட்படுத்துவதில்லை, ஆணுக்கொரு நியதி—பெண்ணுக்கொரு நியதியா?

தலைவன் வருகை சிலநாட்களில் தடைப்பட்டது. தலைவி தோழியுடன் தனித்துப் புலம்பினாள்.

## தூதுடன் வாது

அன்று ஒருநாள், தோழியும் தலைவியும் வீட்டுத்திண்ணையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். மாலைநேரம்! உழவர்கள் மாடுகளை ஓட்டிக் கொண்டு—ஏதோ காதல் நாடோடிப பாடலின் சிலவரிகளைப பாடிக்கொண்டு—உள்ளக்களிப்புடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வீதியிலே இரு பாணர்கள்-

பாழேந்திய கையராய் வந்தனர், இப்பாணர்கள் தலைவியின் நினைத்தைத் தணிக்கத் தலைவனால் அனுப்பப்பட்ட தூதர்கள்.

வாயிற்படியில் வந்து நின்ற பாணர்கள் வணங்கினர்; கரம் குவித்தனர் தலைவனை மன்னித்திடுகவென்று மன்றாடினர். 'தவறுசெய்தல் மனித இயற்கை, அதனை மன்னிப்பதே மாண்பாகும்' இது பாணர்களின் பேச்சு.

'தலைவர் தவறுசெய்தவர்தான். அவர் இங்கே வந்து தலைவியோடு இன்புற்றுவிட்டாலும் தலைவி அவரது பழையநாள் நட்பை நினைந்து அமைதியுற்று இருக்கின்றாள். ஆதலின் தலைவியின் வளைகள் நெகிழவில்லை ஆதலால் அன்புக்குரிய தலைவர் இங்கே வந்து முடிக்கவேண்டுவது யாதொன்றும் இல்லை' இவை தோழியின் உரைகள்.

தலைவி மௌனம் சாதித்தாள்.

தோழியின் துணிவான பேச்சு தூதரின் வாயை அடைத்து விட்டது. அவள் இதுமட்டுமா சொன்னாள்?

'தச்சன் செய்த அழகிய சிறுதேரை ஏறி உட்கார்ந்து ஓட்டி இன்புற்றுவிட்டாலும், இழுத்து இன்புறுகின்றார்களே அதோ வீதியில் செல்லும் சிறுவர்கள்! அதுபோன்றதே தலைவியின் நிலை' பாணர்களின் கண்கள் வீதியில் பாய்ந்தன. சிறுவர்கள் சிறிய அழகிய வேலைப்பாடமைந்த தேர்களை இழுத்துவந்து கொண்டிருந்தார்கள்.

பாணரது சிந்தனை

வீதியில் சிறுதேரைக் கண்டதும் பாணரது சிந்தனைக் குதிரை இறக்கைகட்டிப் பறந்தது. சென்ற ஆண்டில் இந்திர விழாவிற்கலந்து கொள்வதற்காகக் காவிரிப்பூம் பட்டினம் சென்றிருந்தபோது ஆங்குப் பரதவர் சேரியிற்கண்ட காட்சியே கருத்தில் முன்வந்தது.

வீட்டுக்கு முன்வாயிலில் தானியங்கள் காயவைக்கப்பட்டிருந்தன, அவற்றில் சிலவற்றை நெருங்கிவந்த கோழிகள் கொறித்தன. வீட்டில் வாழும் செல்வமகளிர் தங்கள் காதுகளில் இருந்த குழைகளை எடுத்துக் கோழிகளின்மேல் வீசினர்; கோழிகள் ஓடின ஆனால் கொடுங்குழைகள் எடுப்பாரின்றி எறிந்த இடத்திலேயே கிடந்தன. இந்தச் சமயத்தில் இளையோர்கள் தச்சன் செய்த சிறிய அழகிய மரத்தேர்களை ஏறிவராது இழுத்து வந்தனர். அந்தக் காதணிகள் அச்சிறு தேர்களுக்கு

முட்டுக்கட்டை இட்டன.[1] இந்தக் காட்சியைப் பாணர்கள் நன்றாகப் பார்த்தார்கள். பார்த்து சோழநாட்டின் செல்வ வளத்தையும் எண்ணி வியந்து ஊர்திரும்பினார்கள்.

### தூதர் திரும்பினர்

சிறுதேரைப் பற்றிய சிந்தனை, தோழியின் பேச்சால் கலைந்தது 'தேரோடும் வீதியிலே பரத்தையரோடு தலைவர் நாள்தோறும் தேரேறி நீராடச் செல்கின்றாரென்று சிலர் சொல்லக் கேட்டோம், நீங்கள் செல்லலாம்.'

இந்தத் தோழியின் பேச்சுக்குப் பாணர்கள் யாது சொல்ல முடியும்? மெல்லத் திரும்பினார்கள்.

வீதி முனைவரைக்கும் அவர்களது மெல்லிய யாழின் இனிய ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.

அவர்களை அனுப்பிவிட்ட தோழி தலைவியின் பக்கம் திரும்பினாள்; ஆனால் அங்கே அவள் இல்லை.

'தோழீ' என்று குரல் கொடுத்தாள்.

'அவர்கள் போய்விட்டார்களா' என்று கேட்டுக் கொண்டே உள்ளிருந்து வந்தாள் தலைவி.

'அனுப்பி விட்டேன்'—என்றாள் தோழி.

'நல்ல உவமை சொன்னாயடி'—என்று கூறியபடியே தலைவி தன் ஆருயிர்த் தோழியைத் தழுவிக் கொண்டாள்.

### அழியாத ஓவியம்

பாட்டு முடிந்தது; தலைமகன் வாயில்கட்குத் தோழி துணிவாக மறுத்துரைத்த மாண்பு சிறப்பாகத் தெரிவிக்கப் படுகிறது. தும்பிசேர் கீரனாரின் அழியாத ஓவியத்தைக் கீழே காணுங்கள்.

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினும் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல,
உற்றின் புறேஎ மாயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்தின் புற்றனெம்; செறிந்தன வளையே."

(குறுந். ௬௧)

---

1. "கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்" —பட்டினப்பாலை.

# செம்புலப் பெயல்நீரார்

[திரு. எஸ். கண்ணன்]

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுல கத்தைப் பண்டைக்காலத்தில் முரசு முழங்கும் தானையை யுடைய தண்தமிழ்க் கிழவர்களாகிய முடியுடை மூவேந்தர்களும் ஆண்டு வந்தனர். அவர்களுள் இளையராயினும் பகையரசு கடியும் செருமாண் தென்னர்களாகிய பாண்டியர்கள் செந் தமிழ்த் திருநாடாகிய பாண்டிநாட்டை ஆண்டு வந்தார்கள். தொன்றுதொட்டு "ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ்" மொழியைச் சங்கம் நிறுவி வளர்த்து வந்தனர் அப்பாண்டியர் கள். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சால்பு மிகுந்த வாய் மையே அணியாகப் பூண்ட தூய்மைப்புலவர்கள் பலர் அச் சங்கமேறி தமிழ்த்தாயைப் பேணி வந்தனர் அச்செந்நாப் புலவர்கள் தங்கள் 'வடியா நாவால்' கணக்கற்ற பல தமிழ்ப் பாட்டுக்களை ஆக்கியுள்ளனர். அன்னவரின் புலமையையும் பெருமையையும் எடுத்துக்காட்டும் சிறந்த மாணிக்கப்பரல் களாக உள்ளன அப்பாக்கள்.

அவ்விதம் சங்ககாலத்திலிருந்து கவியரங்கேறித் தமிழ் மொழியை வளர்த்த புலவர்கள் எல்லோரும் ஒரு சமயத்தவா அல்லர். ஒரே காலத்தவரும் இல்லை. ஒரே இனத்தவரும் இல்லை. எல்லோரது பெயரும் நமக்குக் கிடைக்கவில்லை. சிலர் தமது பெயரையும் வெளிக்கூறும் இயல்பில்லாக் குணக் குன்றேறி நின்று விளங்கினர். அவர்களது பெயருக்கு ஈடாகப் பிற்காலத்தவர்கள் அவரது பாட்டிலுள்ள ஈடும் எடுப்புமிலாத சிறப்பினையுடைய ஒரு அடியினைக் கொண்டோ, அன்றி அவா கள் கூறியுள்ள உவமையினைக் கொண்டோ அப்புலவர்களுக்குப் பெயரிடுவது வழக்கம். இதை அறிதற்கு நமக்குப் பல ஆதரவு கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக குறுந்தொகை என்னும் சிறந்த தண்டமிழ் இலக்கியத்திற் காணப்படுவன கடவுள்வாழ்த்து உட்பட நானூற்றொரு பாடல்களாகும். அவற்றைப் பாடியவர் கள் பாரதம் பாடிய பெருந்தேவனார் முதலாக அம்மூவனார் ஈறாக உள்ள இருநூற்றுறு புலவர்கள். அவ்விருநூற்றுறு புலவர்களுள் பதின்மூவர் இயற்பெயர் நமக்குத் தெரிந்திலது. அதற்குப் பதிலாக அவர்கள் கூறிய உவமைகளாலே வழங்கப் படுகிறார்கள். செம்புலப் பெயல்நீரார் என்பவர் அவர்களுள் ஒருவர்.

கண்ணைக் கவரும் அழகியதொரு தாதுகுசோலை. அதில் வானிலே தோன்றும் திரு வில் மண்ணிலே தோன்றியதோ

எனத் தோன்றும் வண்ண மலர்கள் பல பூத்து விளங்கும் தடாகம் ஒன்று. அதன் துறையின் ஒரு புறத்திலே 'அந்தமில் முகன்' ஒருவன் எதிர்ப்படுகிறான் 'எண்ணரு நலத்தினாள்' ஒருத்தியை. அவர்கள் தாய்மார்கள் யார் யார் என இருவருக்கும் தெரியாது. அவனுடைய தந்தைக்கும் அவளுடைய தந்தைக்கும் இடையே யாதொருவிதமான தொடர்பும் இல்லை. இவர்களோ ஒருவரையொருவர் முன்பின் அறிமுகமாகாதவர்கள். அவ்விதம் முன்பு யாதொரு தொடர்பும் இல்லாதிருந்தும் தலைவன் தலைவியின் உள்ளம் ஒன்றுபட்டது. 'அவனும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'. ஒருவரை ஒருவர் நோக்க ஓர் உள்ளம் மற்றொன்றை ஈர்த்தது. 'கண்ணொடு கண் கவ்வ' உணர்வு ஒன்றிற்று. இருவரும், அண்ணல் இதயத்தில் அவளும், அவள் இதயத்தில் அண்ணலும் மாறிப் புகுந்தனர். இவ்வாறு ஒன்றுபட்ட உள்ளத்தை அப்புலவர் பெருமகன் ஓர் உவமை வாயிலாகத் தெளிவாக்குகிறார். அதை ஈண்டுக் கவனிப்போம்.

பெரிய செக்கர்வானம் போன்றதொரு செம்மண் நிலம். அந்நிலத்தது மாமழை பொழிகிறது. பெய்த மழைநீரானது அச்செம்மண்ணோடு கலந்து அதன் செந்நிறத்தை அடைகிறது. நிறம் மட்டுமல்ல, அதன் சுவையையும் பெறுகிறது. இவ்விதம் நிறத்தாலும் சுவையாலும் ஒன்றுபட்ட செம்மண்ணையும் நீரையும் உள்ளத்திலும் உணர்விலும் தானாகவே ஒன்றுபட்ட அன்புடை நெஞ்சங்கள் இரண்டிற்கு உவமையாக்குகிறார். செந்நிறமும் சுவையும் நீரிலிருந்து எளிதில் பிரிக்கமுடியாதவாறு, 'நீரும் நிறமும்' ஒன்றுபட்டன. அதுபோல தலைவன் தலைவியின் நெஞ்சங்கள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க இயலாத நிலையிலே ஒன்றிவிட்டன. அன்புடை நெஞ்சங்கள் தாம் கலந்தது போலவே, இங்கு உவமான உவமேயங்கள் இரண்டும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக உள்ளன. உவமையின் சிறப்புத்தான் என்னே! அவ்வுவமை பொருந்தக் கூறிய புலவரின் புலமைத் திறன்தான் என்னே!!

"யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே."

என்பது அக்குறுந்தொகைப் பாட்டு.

இந்த அருமையான பொருள் செறிந்த செய்யுள் செய்த செந்நாப் புலவரின் இயற்பெயரை விடுத்து அவர் கூறிய உவமைப் பெயராலே அவரைத் தமிழகம் அழைத்தது.

# காந்தியடிகளும் திருவள்ளுவரும்[1]

[திரு. கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல்]

"இறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் உயர் மதிற்கூடலின் ஆய்ந்த ஒண் தீந் தமிழ்" என்று மாணிக்கவாசகர் பாடினார் அன்று. உயர்ந்த மாடமாளிகைகளும் பல்வேறின மக்களும் நிறைந்த இந்தத் தெல்லிமா நகரிலே தமிழ்ப் பேரறிஞர் பலர் தமிழினை ஆராய்கிறார்கள், இன்று. இது தமிழ்மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சியினை அளிக்கும் செயலாகும்.

எனக்கு முன்பு இங்கே உரை நிகழ்த்திய பேரறிஞர் இப்பெருநகரில் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்று கூறினார். ஆனால் இங்கே நூற்றுக் கணக்கில் மாத்திரமே தமிழன்பர்கள் கூடியுள்ளனர். ஆயிரக்கணக்கில் நம் மக்கள் வந்து இத்தமிழ் விழாவினைச் சிறப்பிக்காதது வருந்தத்தக்கதே.

எனினும் இங்கு குழுமியுள்ளோர் தம் தமிழார்வமும், சிறிதும் வாட்டமின்றி மணிக்கணக்கிலே தமிழிலக்கியத்தின் சிறப்புக்களைக் கேட்டுக் கேட்டுச் சுவைக்கும் ஆற்றலும் போற்றத்தக்கன. எங்கள் யாவரையும் சிறிது விழிப்புடன் இருக்கச் செய்வதற்காகப் "பசிவந்திடப் பத்தும் பறந்து போம்" என்பதை நினைவூட்டினார் நம் அவைத்தலைவர். "கருமமே கண்ணாயினார்" பசியினையும் நோக்கார் என்பதை நிலைநாட்டும் முறையில் அன்பர்கள் யாவரும் நடந்துகொண்டமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தமிழ்விழா நடக்கும் தெல்லிமாநகர் இந்தியாவின் தலைநகர். இந்தியாவை நினைக்கும் பொழுது காந்தியடிகளே நமக்கு முதலிலே காட்சியளிக்கிறார். இப்பெரியார் வாழ்ந்த காலத்தில் வாழும் பாக்கியத்தையும் அவருடைய உயர்ந்த கொள்கைகளை அறியும் வாய்ப்பினையும் நாம் பெற்றுள்ளோம்.

தமிழினத்தை நினைக்கும்பொழுது தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்கும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரே நமக்கு முதலிற் காட்சியளிக்கிறார். ஆகவே இந்தியாவின் தலைநகரிலே நடக்கும் தமிழ்விழாவிலே நாம் காந்தியடிகளையும் திருவள்ளுவரையும் நினைக்காமலிருக்கமுடியாது. இதனாலேயே இவ்விருவரை

1. டெல்லித் தமிழ்விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

யும் பற்றி யான் பேச விழைந்தேன். திருவள்ளுவருடைய நூலில் ஈடுபட்டு அதனைக் கற்பதற்கு விரும்பிக் காந்தியடிகள் தமிழினைக் கற்ற செய்தி யாவரும் அறிந்த தொன்றே. இந்த உலகத்திலே "கத்தியின்றி இரத்தமின்றிப்" போர்செய்யும் முறையினைக் காந்தியடிகள் நிலைநாட்டினார். இந்த அறப்போரை "சத்தியாக் கிரகம்" என்றார். இதனைத் தென்னாபிரிக் காவில் அவர் முதன்முதல் நடத்தினார். அப்பொழுது உற்ற துணைவர்களாயமர்ந்து காந்தி அடிகளுடைய உள்ளத்தைக் கவர்ந்த பெருமையும் நம் தென்னாட்டுத் தமிழ்மக்களுக்கே உரியதாகும்.

திருக்குறளைப் பற்றி இம் மேடையிற் பேசிய நண்பர் உங்கள் யாவரையும் ஓயாது நகைக்கச்செய்தார். அன்பின தத்துவத்தைப் போல நகைப்பின் தத்துவத்தையும் நன்கறிந்தவர்கள் தமிழரே யாவர். மக்களை நகைக்கப் பழக்குதற்குப் பிரான்சு தேசத்திலே ஒரு பாடசாலையை இப்பொழுது நிறுவியிருக்கிறார்களாம். "சிரித்துச் சிரித்து வாழுங்கள், சிரிக்கும் ஆற்றல் இல்லாதவர்களுக்கு இந்தப் பெரிய உலகம் பகற்காலத்திலும் இருள் மயமாகவே இருக்கும்" என்று நம் வள்ளுவனார் இருபது நூற்றாண்டுகட்கு முன்னரே கூறியுள்ளார்.

> "நகல்வல்லா ரல்லார்க்கு மாஇரு ஞாலம்
> பகலும்பாற் பட்டன்று இருள்."

இதுமட்டுமா? துன்பங்கள் இடையூறுகள் முதலியன வரும் பொழுதெல்லாம் சிரியுங்கள். இவற்றை நீக்கி வெற்றியடைதற்கு இதைவிடச் சிறந்த வழியில்லை என்று ஒப்புயர்வற்ற—உலகத்தில் ஒருவருமே காட்டாத—இலகுவான வழியினையும் வள்ளுவர் பெருமான் உலகத்துக்குக் காட்டியிருக்கிறாரே! காந்தியடிகள் தமது பொக்கைவாயப் புன்சிரிப்பினாலன்றோ பகைவர்களையும் அன்பர்களாக்கி அருளாட்சி செய்தார்; தமக்கு நேர்ந்த பேரின்னல்களையும் வென்று இன்புற்றார். இதுநிற்க.

திருவள்ளுவர் தந்த தமிழ்மறையினைப் பொய்யாமொழி என யாவரும் போற்றி வருகின்றனர். திருவள்ளுவர் கூறும் பல நீதிகளை மக்கள் கடைப்பிடித்து நடக்கமுடியுமா என்ற ஐயப்பாடு அவருடைய நூலைப் படிப்போருக்கு உண்டாவதியல்பே. இந்த ஐயத்தை நீக்கத்தக்க முறையில் திருக்குறள் முழுதுக்கும் இலக்கியமாக வாழ்ந்து காட்டிய வித்தகப் பெரியார் காந்தியடிகளேயாவார். வாய்மை, பிறர்க்கின்னாசெய்யாமை, கடவுட் பத்தி, தீமையையும் நன்மையினால் வெல்லுதல் முதலிய காந்தியடிகளுடைய அடிப்படைக் கொள்கைகள் யாவும் திருவள்ளுவர் விளக்கிய சீரிய கொள்கைகளேயாகும்.

காந்தியடிகளின் வாழ்க்கையினை முழுதும் அடக்கி மிளிரும் நூல் இந்த உலகில் திருக்குறள் ஒன்றேயாகும். காந்தியடிகள் வாய்மையினைக் கடைப்பிடித்தொழுகினார்; உண்மையே கடவுள் என்றார்; தம் வாழ்க்கையினைச் சத்திய சோதனை என்று கூறினார்.

இவற்றால்,

"யாமெய்யாகக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற"

என்ற திருவள்ளுவர் கூற்றினை விளக்கினார். உள்ளத்தால் பொய்யாதொழுகிய அடிகளார் தம் பெருமையினைக் கண்டு அவரை உலகம் போற்றியது; மக்கள் உள்ளங்களில் அவர் இடம் பெற்றார்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

எனுங் குறளை அவர் மெய்ப்பித்தார். காந்தியடிகள் அகிம்சை என்று கூறியதைத் திருவள்ளுவர் பிறர்க்கின்னாசெய்யாமை என்று உரைத்தார். இந்த உலகம் கண்ட அகிம்சாமூர்த்திகள் பலருள்ளும் காந்தியடிகள் தனிச்சிறப்பினை உடையவர். அவர் வகுத்த அகிம்சாநெறி திருவள்ளுவர் வகுத்த நெறியில் அமைந்து விளங்கும் அருமைப்பாடுதான் என்னே! சால்பின் பெருமைக்கும் அறிவின் பயனுக்கும் மாசறுசீர் கொள்கைக்கும் உரைகல் பிறர்க்கின்னா செய்யாமை என வள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை"

எனும் வாய்மொழிகளுக்கு அன்றோ காந்திஅடிகள் தம் வாழ்க்கையினைத் தியாகம் செய்தார்.

தீமையைத் தீமையினால் அழிக்க முடியாது; நன்மையினாலேயே வெல்ல முடியும். இதுதான் திருவள்ளுவர் கூறும் அடிப்படையான பேருண்மை. இதைத்தான் காந்தியடிகள் அணுக்குண்டினால் அல்லோலகல்லோலப்பட்ட உலகத்துக்கு எடுத்து விளக்கினார்.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை."

இந்தக் குறளில் பொதிந்துள்ள அன்புக்குண்டுதான் இக்கால உலகத்தை ஈடேற்றத்தக்கது சிறந்த—உயர்ந்த—பண்பாட்டின் உயிர்நிலைதான் இக்கொள்கை. இதை ஈராயிரம் வருடங்களுக்கு முன்னரே நம் திருவள்ளுவர் அறிந்து உலகம் உய்ய உரைத்தார் இதனைக் காந்தியடிகள் தம் வாழ்க்கையினால் உணர்த்தினர் காந்தீயமும் வள்ளுவமும் தோன்றுமிடமும் முடியுமிடமும் இஃதே எனலும் சாலும்

ஏனைய ஆசிரியர்களுக்கு இல்லாத தனிமதிப்பைத் திருவள்ளுவர் பெறுதற்குரிய காரணங்களுள் ஒன்று, அவர் முயற்சிக்கு முதலிடம் கொடுத்ததேயாகும்

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது அவர் வாய்மொழி

"விதி விதியென்றுகூறி மதிமயங்கி அடிமை வாழ்வு வாழ வேண்டாம். இந்த உலகத்தில் எண்ணியதை எவரும் எண்ணியவாறு பெறலாம், செய்யமுடியாத காரியம் இல்லை" என்று அவர் அழுத்தந் திருத்தமாகக் கூறினர் இக்கூற்றையே காந்தியடிகள் நமக்குத் தம் வாழ்வினாலே விளக்கிக் காட்டினர்.

காந்தியடிகளுடைய வாழ்வு நமது உள்ளத்தைத் தொடுகிறது; உருக்குகின்றது; நம் உணர்ச்சியைப் பெருக்குகின்றது. இதன் காரணம் யாது? அவர் தெய்வத்தின் அவதாரமாகப் பிறக்கவில்லை, பெரிய வரங்களைப் பெற்று உலகத்தை ஆட்டி வைத்தவரும் அல்லர். முன் வினைப்பயனால் எல்லாம் பெற்றோமென்று பெருமை பேசியவருமல்லர் காட்டுக்குள் சென்று மூச்சையடக்கி அவர் தவஞ்செய்யவுமில்லை எங்களுடன் எங்களைப் போல் வாழ்ந்தார், பிழைகள் விட்டுவிட்டுத் திருத்தினர். துன்பத்தை அனுபவித்து அனுபவித்து உயர்ந்தார்; யாவரும் உயருதற்குரிய வழியில் நின்று ஒளிபெற்றார். சுருங்கக்கூறின் அவர்,

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

எனும் குறளுக்கு இலக்காக வாழ்ந்து, உயர்ந்து ஓங்கிப் புகழ் பெற்றார், மக்களின் உள்ளங்களையும் கொள்ளைகொண்டார்.

அவர் இறந்த முறை உலகத்தையே கலக்கிவிட்டது. பலர் பல காரணங்களைக் கூறினர்கள். பெர்னட்ஷா எனும் அறிஞர் "இந்த உலகத்தில் மிக நல்லவராயிருப்பது பெரிய ஆபத்துக்கிடமானது என்பதை அது குறிக்கிறது" என்றார். ஆனால், காந்தியடிகளுடைய வாழ்க்கைமாத்திரமன்றி அவருடைய மரணமும்

வள்ளுவர் குறளுககு இலககியமாகவே விளஙகுகிறது எந்தச் சாவினை இரநது வரவேற்க வேண்டுமென்று வள்ளுவர் கூறினரோ, அநதச் சாவினை காநதியடிகள் பெற்ருர.

> "புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்காடு
> இரந்துகோட் டக்க துடைத்து"

என்பது குறள் நிலையாமையினையே பெருமையாகக்கொண்ட இநத உலகத்தில் அழியாத நிலைதது நிறபது யாதென்னும் ஆராய்சசியில் திருவள்ளுவா ஈடுபட்டார். முடிவாக,

> "ஒன்ரு உலகதது யாநத புகழல்லாற்
> பொனருது நிற்பதொன் றில"

என்று கண்டார். இநத முடிவின்படி காந்தியடிகளுடைய புகழும் திருவள்ளுவாதம் புகழும என்றும் நிலைதது நிற்கும்.

திருககுறளின் சிறப்பை முதலிலே தமிழ்மக்கள் வாழும் இடங்களிலும் பின்னர்ப பிறநாடுகளிலும பரபபுதற்கே எமது தமிழமறைக கழகம முயல்கிறது இநத ஆண்டிலே திருவள்ளுவா திருநாளை ஒவவொரு ஊரிலுங் கொண்டாடச செய்தோம். வருகிற ஆண்டிலே ஒவ்வொரு வீட்டிலுங கொண்டாடசசெய்வோம இதற்கும் உலகததிலுள்ள சிறந்த மொழிகள் யாவற்றிலும திருககுறளை மொழிபெயர்க்கச் செயயும எமது முயற்சிக்கும் ஆககமும் ஊக்கமும நல்குமாறு அன்பர்கள யாவரையுங் கேட்டுககொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றினைக் குறிப்பிட விரும்புகிறேன். சில நாட்களாக யான் வட இநதியாவில் பல இடங்களுக்கும் சென்றேன். இவ்விடஙகளிலுள்ள பொதுமக்களமட்டு மனறிப படித்தவர்களுங்கூடத தமிழ் இனத்தைபபற்றியோ, தமிழ மக்களின் பழைய நாகரிகத்தைப்பறறியோ நன்கு அறியாமலிருக்கின்றனர். தென்னிந்திய மக்கள் யாவரையும் 'மட்ராஸி' என்ற அளவில் மாத்திரமே பலர் அறிந்திருக்கின்றனர். ஆகவே, தமிழ் இனத்தைப்பற்றியும, தமிழ்மொழியின் சிறப்பைப்பற்றியும வடஇந்திய மக்களும் நன்கு அறிந்துகொள்ளச் செய்தல் இத்தமிழ் வளர்ச்சிக் கழகம்போன்ற தமிழ் நிலையங்களின் கடமையாகும் தெல்லிமாநகரில் நடக்கும இத்தமிழ் விழா இத்துறையில் பெரும்பணி ஆற்றியுளது. இவ்வளவுடன் அமையாது இனனும பல தொண்டுகளைச செய்தல்வேண்டும்.

**வாழ்க வள்ளுவம்! வாழ்க தமிழ்! வாழ்க உலகம்!**

# எல்லாம் தமிழ்

[திரு. வே. நடராசன், மறையூர்]

தமிழ் இனிமைமிக்கது பலர் மனதைக் கவர்வது - அது வளர்க்கப்பட வேண்டும். வளர்கிறது—வளர்ந்துகொண்டு தானிருக்கிறது - புத்தக அளவிலே பேச்சளவிலேதான் வளர்கின்றது என்று கூறுகிறோம் நடைமுறையில்.

வேதா—ர்—ண—ய—ம், ஆகா என்ன கொலை! அழகான 'திருமறைக்காடு'—சொல்—இனிய சொல் இருக்கும்போது ஏன் "வேதாரணயம்" என்றியம்ப வேண்டும், இதே போலத்தான் திண்டிவனம்—புளியங்காடு—என்பது தமிழ்ச்சொல். (திமிதிரிணீ வனம் என்ற வட சொல்லின் திரிபு திண்டிவனம்—புறநானூற்றுக் கட்டுரைகள்—பக் 9)

திருக்குடவாயில்—அதாவது—"சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்குமடியேன்"—என்று சைவப் பெரியாரால் பாராட்டப்பெற்ற திருவாரூரில் ஒரு காலத்தில் மனுநீதிச்சோழன் அரசாண்டான். திருவாரூருக்குப் பத்துக்கல் மேற்கே அமைந்துள்ளது திருக்குடவாயில்,

"படவர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி துணைகடல்
மடுக்குங் காவிரி மடந்தை"

என்பதனால் குடம் என்றால் மேற்கு ஆகியது. மனுநீதிச் சோழனின் அரசிருக்கையாகிய திருவாரூருக்கு மேற்குவாயிலாக—குடவாயில் அமைந்திருந்தது என்பது பொருத்தமே. திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருக்குடவாயிலாக விளங்குகின்றது. அதேபோல திருவாரூருக்குத் தெற்கே சிலகல் தூரத்தில் தெற்கு வாசல் என்னும் பெயர் கொண்டு ஓர் இடம் உள்ளதாக அறிகின்றோம்.

குடவாயில் என்பதற்கு—குடவாயிலின்கண்ணே எழுந்தருளியிருக்கும் சிவன் கோவில் மேற்குநோக்கி இருப்பதனால் குடவாயில் என்று பெயர் வந்தது என்றும் சிலர் கூறுவர். இன்னும் "சிவபிரான்தானே ஓர் அம்பினால் குடத்தின் மூக்கைச் சிதைத்தார்.—குடம் சிதைந்தது அதனால் குட மூக்கு—குடந்தை எனக் கும்பகோணத்திற்குப் பெயர் வழங்கியது. சிவபிரான் நின்று அம்பெய்த இடம் குடவாயில் எனப்படுகின்றது" என்றும் கூறப்படுகின்றது. (கலைமகள் - பங்குனி)

எது எப்படியாயினும் குடவாயில்—என்பது தூய்மையான—அழகிய சொல், என்பதில் தவறில்லை. அரசாங்க அலுவ

ளாளர் பலகையில் பொறிப்பது கொடவாசல் என்று. இதை அவாகள திருததிக் குடவாயில—எனறு எழுதுதல வேண்டும. இன்னும இது போனறு எத்தனையோ ஊாகளின் பெயாகள் சிதைக்கபபட்டிருககின்றன. அம்மாதிரியான அழகறற சொற் களையும சில தமிழபபுலவர்களைககொண்டு ஆராய்ச்சிசெயது திருததலாம திருத்ததான வேண்டும.

தமிழை வளாகக வேண்டுமானால்—வளரவிட வேண்டுமா னால் நடைமுறையிலுள்ள 'ஆபாச' பிறமொழிச சொற்களையும், தேய்நதோ—அவசியமின்றி மாறறப்பட்டோ விளஙகும ஊரின் பெயாகளையும் நீககி அழகிய சொல்லாக ஆக்கவேண்டும—தமிழில ஆககமுடியும. 'ரயிலவே' துறையை எடுத்துக் கொளளுஙகள அபபபபா! 'ஆபாசம' கொஞசம அலல. "கைபபிடியை அகாற (!) ணமாய் உபயோகிப்போருக்கு அப ராதம (!) ஐமபது ரூபாய

"புலவாககுவேல—தமிழ்இளைஞர்க்குப் பாலாம் தமிழ்' என்று ஏடடளவிலே எழுதி மகிழ்ந்தால மட்டும் போதாது. சொலலின் செலவா ரா. பி. சேதுபபிளளை சொல்லுவதுபோல "தியாகராய நகர்—தி நகர்—தீ நகராகமாறும். சுருக்கமாகத் தியாகை எனனலாம்

பஸ் ஸடாண்டு "—பேருநதி நிலையம—இபபடிக்கூற எத்தனைபேரின் நா—எழ வெட்கபபடுகின்றது தெரியுமா? இன்னும பல அரிய தமிழசசொற்கள மறைநது அதறகுப்பதில், 'அலாதி' யாகப பல சொறகளை எக்காரணங கொண்டோ சிலர் வழககினில் கைக்கொண்டு தூய்மையான தமிழ்சசொற்களை அருவருக்கின்றனா. 'அலாதி'—யைத்தான் பாருங்களேன்! "உருதுவில் தனி, வேறு என்ற பொருளில் 'அலாஹிதா' என்று ஒரு சொல் வழங்குகிறது. அதுவே தமிழில அலாதி என்ற உருவத்தைப்பெற்று உலவுகிறது." என்று "கலைமகள" கூறுகிறது.

அடுததது சமாளித்தல்—"அவன் பெரிய சங்கடத்தில் மாட்டிககொண்டான். ஆனாலும எப்படியோ சமாளிததுக் கொண்டான்" என்று பேசுகிறோம் சமாளிததான் என்ற சொல் சரிபபடுத்தினான், தாங்கினான என்ற பொருளில் வரு கிறது. "இநதுஸ்தானி"யில் 'ஸமபால்' என்ற சொல் 'தாங்கு தல்' என்ற பொருளில வருகிறது "ஸம்பால்" என்பதில் 'ம்' எனபதற்கு முழுஉச்சரிப்பு இல்லை. தமிழ்முறைப்படி சொன்னால் அது மகரககுறுக்கம். அந்தச் சொல்லை உச்சரிக் கும்போது 'ஸமால்' என்றே காதில் விழும. அந்த வாரத் தையே தமிழில் இறக்குமதியாகிக் சமாளித்தல் ஆயிற்று.

(கலைமகள்-வைகாசி)—இம்மாதிரியே இறக்குமதியாகித் தமிழ்ச் சொற்களை அழிக்கும் சொற்கள் அதிகமாகி அறிஞர்கள் 'பேனா'—வினின்றும் உதிர்கின்றன. (அண்ணாதுரை அவர்கள்) ஓர் அறிஞர். சிறுகதை யொன்றில் ஓரிடத்தில் 'கஷ்டாளிகள்' என்னும் சொல்லை கையாண்டிருக்கிறார். இம்மாதிரியே பல அறிஞர்கள் செய்தால் பாமரர்கள் 'கஷ்டத்தையும், நஷ்டத்தையும், நமஸ்காரத்தையும், பூஜையையும், சாதத்தையும், ஸபஷ்டத்தையும், புஷ்பத்தையும் விலக்கித் தமிழ்ச் சொற்களை அமைத்துப் பேசவோ அல்லது எழுதவோ—நீண்ட நாட்களாகும் என்பதில் ஐயமில்லை. 'கஷ்டாளிகள்'—இந்தச் சொல்லை அந்தச் சிறுகதையைத் தவிர வேறு எதிலும் நான் சந்தித்தது கிடையாது. பாடு+ஆளி—இருக்கும்போது கஷ்டம்+ஆளி—ஏன்? என்று கேட்கிறேன் தளபதி இருக்கும்போது சேனாதிபதி, திரு இருக்கும்போது ஸ்ரீ—இவையெல்லாம் தமிழைக் கெடுக்கும் என அறிந்தும் 'சுதேசமித்திரன்' போன்றவைகள் பெரும்பாலான வடசொற்களைக் கலந்து நம்மை வருந்தும்படி செய்கின்றன. தமிழை வளர்க்க—வளரவிட—செய்தித்தாள்கள் நாட்டுக்கு நல்ல பணி ஆற்றமுடியும். ஆற்றத்தான் வேண்டும் பல குறைந்த தமிழ்ப் படிப்பு உள்ளவரும் எளிதில் தூய்மையான தமிழ்ச்சொற்களை அடைய முடியும்.

"ஆங்கில பாஷையை எல்லோரும் படிக்கவேண்டும். அதனால் பொதுஅறிவும் விஞ்ஞான அறிவும் வளர வசதி உண்டு. தமிழ் புராதன பாஷையாக இருந்தாலும் அதற்கு அவ்வளவு மகிமை நான் கொடுக்கவில்லை. சிலப்பதிகாரம், பிரபந்தம், தேவாரம் முதலியவைகள்தான் நம் அடிமைத்தனத்திற்குக் காரணம்." இவ்வாறு கோவையில் சிலப்பதிகாரத்திற்கு நல்ல எளிய உரை எழுதிய இரா. க. சண்முகனார்க்கு வருத்தந் தெரிவித்த கூட்டத்தில் திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் பேசியுள்ளார். (சுதேசமித்திரன்—21—5—53) "தமிழ் இலக்கியம்மீது ஈ. வெ. ரா. சீற்றம்—சிலப்பதிகாரத்தினால் அடிமைத்தனம் விளைந்ததாம்"—என்று செய்தித்தாளில் கொட்டை எழுத்துக்களில் வந்த தலையங்கத்தைக்கண்ட 'தமிழினிய தெய்வதமே—மொழிகள் குலத்தனி விளக்கே' எனப் பாடிய சோமசுந்தர பாரதியார் மனம் வருந்தியிருப்பார். 'மங்கை ஒருத்தி தரும் இன்பம்—எங்கள்—மாத்தமிழுக்கீடில்லையே' எனப் பாடிய பாரதிதாசனார் மனம் புண்பட்டிருக்கும் என்பதில் ஐயம் கிடையாது. அடிமைத்தனமல்லாததை அடிமைத்தனமென்று கூறும் பெரியார்கள் நாட்டில் நிலவும்வரை நாட்டில் தமிழ் வளருமா? என்னே அடிமை மதி!

# தமிழ்க்கொலை

[திரு. பி. எல் சாமி, பி. எஸ். ஸி.]

பாமரரும் படித்தவரும பேசசிலும் எழுத்திலும் மேடை யிலும் கடைகளிலும் தமிழ்மொழியைக் கொலைசெய்வது மிக வும் வருநதததக்கது அரசாங்கத்தாரும வணிகரும விளம பரங்களிலும அறிக்கைகளிலும தமிழைப் பிழைபட எழுதிவரு வதைப் பலரும் பார்த்திருக்கலாம். இதற்கு எவ்வளவோ சான்றுகள் சென்னைநகரிலும் பிறநகரங்களிலிருநதும எடுததுக் காட்டலாம. இக்கட்டுரையில் ஒருசில காட்டபபடும்.

முதலில அரசாங்கத்தமிழைப பார்ப்போம. அண்மையில் முத்தையாசெட்டியாா அறிவுறுததியும வானொலி நிலையத் தார் தங்களது 'அருமைத் தமிழைக்' கைவிட்டதாகத் தெரிய வில்லை. இரயில்வேத தமிழே ஒரு தனிப்போக்குடையது! 'அபாயச் சங்கிலியை இழுபபவாகள... ....; 'வெளியே வற', 'தண்ணீரைச் சேதபபடுததாதிருக்கக் கோறப்படுகிறார்கள்' என்று இப்முறையில தமிழைக் கொலை செய்வதே இரயில்வேத் தமிழின் போக்கு. ஆண்கள, பெண் கள் என்றெழுதினால் யாருக்கும் புரியாதுபோவதில்லை. இருப பினும 'புருஷாகள,' 'ஸதிரிகள' என்றும் இன்னும கீழ்ததர மாக 'ஸ்ரீகள்' என்றும புகைவண்டிநிலையங்களில் காணப்படு வது உண்மையில் மிகவும் வருத்தபபடவேணடியதாகும. இம முறையில் இரயில்வேததலைமை நிலையம, தமிழைக் கோருதபடி, இருக்குமாறு கோரப்படுகிறார்கள் என்று அந் நிலையததா ருக்கு அறிவித்துவிடவேண்டும். அவர்கள் திருததாவிடில் மக் களே திருதத முற்படுதல் வேண்டும். சென்னை அரசாங்க அறிக்கைகள ஒரு கலப்படத் தமிழில் வெளிவருகின்றன. பிழைகள் எண்ணில; உருதுவும வடமொழியும் ஆங்கிலமும் கலவாத ஒரு தொடர்மொழிகூடக் காண்பதரிது.

வணிகர்களின் விளம்பரப் பலகைகளில் ரகர றகர, லகர ளகர வேற்றுமைகள் ஒழுங்காகவே இருப்பதில்லை. இவைகளை யெல்லாம திருததும்படி இளைஞர்களும் பெரியவர்களும் வணி கர்களையும் மற்றவரையும் வற்புறுததவேண்டும். ஒருமுறை திருச்சியில் 'சாவி' (key) வாங்குவதற்காகக் கடைக்குச சென் றேன். 'இங்கு 'கீ' விற்கப்படும' என்று ஒரு விளமபரம் ஒரு கடையில் மாட்டப்பட்டிருந்தது. ஆங்கிலச்சொல்லை அப்ப டியே தமிழில எழுதுவது இந்த வணிகர்களின் வழக்கமாதலால் அங்கு, சாவிதான் விற்கிறதென்று நினைத்தேன். இங்குச் சாவி

யில்லை நெய்தான் விற்கிறதென்று அந்த வணிகர் சொன்னதும் மலைத்துவிட்டேன். 'கீ' எனும் சொல்லை மெல்ல ஒலித்தால் ஆங்கிலத்தில் அது (ghee) நெய்யைக் குறிக்கும். எளிதான நெய் என்ற சொல்லை விடுத்து ஆங்கிலச் சொல்லைக் கையாண்டு குழப்பத்தில் ஆழ்த்தியதை அந்த வணிகருக்கு அறிவுறுத்தித் திருத்தச்செய்தேன். இதுபோலப் பிழைமலிந்த விளம்பரங்கள் எத்தனையோ உள. அண்மையில் பெங்களூர் சென்றிருந்த போது பிறப்பு இறப்பு, மற்றும் அம்மை முதலிய தொத்து நோய்களைப்பற்றிய பதிவு செய்யும் அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். 'ஜனன, மரண, காலரா, வைசூரி முதலிய தொத்து நோய்கள் கண்டவுடன் உடனே அறிவிக்கவேண்டியது,' என்று எழுதிய விளம்பரத்தைப் பார்த்தேன். எனக்குச் சிரிப்புத் தாழமுடியவில்லை எவ்வளவு ஆழ்ந்த கருத்துள்ள அறிக்கை! பிறப்பு இறப்பு ஆகிய இரண்டையும் பிணிகள் என்றுதானே ஆழ்வார்களும் நாயன்மார்களும் வள்ளுவரும் கூறிப்போயினர் காலரா, அம்மை, முதலிய 'தொத்து நோய்களோடு' பிறப்பு இறப்பையும் சேர்த்து எழுதிய மெய்யறிவைப் போற்றாதிருக்க முடியுமா! இம்முறையில் தமிழைக் கொலை செய்யும் விளம்பரங்கள் பல.

பெரிய பெரிய இடங்களிலும் தமிழ்க்கொலை நடைபெறுகின்றது. ஊருக்குப் பெரியவர்கள், பெரும் எழுத்தாளர் எனப்படுவோர், அறிஞர்கள் முதலியோர் செய்யும் கொலையைப் பார்ப்போம். நகரமன்றத் தலைவர் ஒருவர் ஒருமுறை தமிழ்க் கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்கினார். தலைமை உரையைத் தொடங்கும்போதே, 'தமிழை எடுத்துக் கொல்லுங்கள், கம்பனை எடுத்துக் கொல்லுங்கள், வள்ளுவரை எடுத்துக் கொல்லுங்கள்,' என்று அடுக்கிக்கொண்டே போனார். அதற்குமேலே தமிழை எடுத்துக் கொல்லமுடியாதபடி கூட்டத்தார் நகைப்பால் நிறுத்தினார். 'கொள்ளுங்கள்' என்ற சொல்லைக் கொல்லுங்கள்' என்று கொலைசெய்தார் அந்தப் பெரியார்!

நுனிப் புல் மேய்வது போன்று தமிழறிவு படைத்த சில எழுத்தாளர், 'எழுத்தாளர்' என்று பெரிய பட்டங்கள், விளம்பரங்கள் மாட்டிக்கொண்டு பெருமை பாராட்டுகின்றார்கள். தமிழோ என்று ஐயுறும்படி அவர்கள் தமிழ் இருக்கின்றது. இவர்களே திரு. வி. க. அடியார் எனவும் சொல்லிக்கொள்கிறார்கள். அழகான தமிழ்ச்சொற்களை விட்டுவிட்டு 'பல்லை உடைக்கும் காதை அடைக்கும் தமிழச்சொற்களைப் பயன்படுத்துவதே 'தெய்வப் பிரீதி'யாகக் கொண்டு தமிழ்த்தாய்க்கு அதையே 'அர்ப்பணமும் சமர்ப்பணமும்' செய்து மகிழ்கிறார்கள். இந்த

'அங்குராரப்பணமும் தர்ப்பணமும' என்று தொலையுமோ அன்றே தமிழ்த்தாயின் முகவடுக்கள் நீங்கும். தமிழ்நாட்டில் பெரிய எழுத்தாளர் என்று ஒருசிலரால் கருதப்படும் ஒருவர் எழுதின தொடர்கதையைப் படித்துக்கொண்டிருந்தேன். 'ஸ்வச்சமான நிலவு' என்ற ஒரு தொடரைக் கண்டதும் எனக்கே தூக்கி வாரிப்போட்டது. பொருளைத் தெரிந்து கொள்ள அகராதியைப் புரட்டினேன் புரியவில்லை; அறிஞர் சிலரைக் கேட்டேன், தெரியாது என்றனர். இறுதியாக வடமொழிப் புலவரைக் கேட்டேன். 'பாலகிறமான நிலா' என்பது பொருள் என்றார் இவர்கள்தான் பொதுமக்களுக்காகப் பொதுமக்கள் பேசுவதுபோல எழுதுகிறார்களாம்.

நாகபுரியில் இந்திய மொழிகளுக்கெல்லாம் சேர்த்து ஒரு பெரும் அகராதி எழுதிக்கொண்டு வருகிறார்கள். தில்லி அரசாங்கத்தின் சார்பில் ஏராளமான பொருட்செலவில டாக்டர் ரகுவீர் என்பவா அகராதியைச் செய்து வருகிறார் இந்த அகராதியின அட்டையில தமிழில் "பாரதீயகோச" என்று அகராதியின பெயா எழுதப்பட்டிருக்கிறது. "பாரதீயகோச" என்றால 'இந்தியமொழிகளின் அகராதி' என்பது அவர்கள் அகராதிப்படி பொருள் சிறிதளவாவது தமிழறிவு இருக்குமானால 'கோச' என்று சொல் முடிவது தமிழ மரபல்ல என்பதை உணர்ந்திருப்பா. அட்டையே இப்படியென்றால உள்ளே எப்படியோ! இந்திய நாட்டில உள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுவான கலைச்சொறகள் அமைத்து அதைத் தமிழிலும் புகுத்த முனைந்துள்ளனர். அப்துல்கலாம் ஆசாத, முன்சி போன்றவர்கள் அதில் பெரும் பங்கு எடுத்துள்ளனர். முழுவதும வடசொற்களாய் அமைந்த இச்சொற்களைத் தமிழ ஏறகமுடியாது. 'மச்சசேததிரம,' 'ஜலபாதை' என்ற சொற்களைப் பார்ததாகிவிட்டது அண்மையில் பூனாவில் பேசிய சி. பி. ராமசாமி ஐயர் வடமொழியைப பொதுமொழியாக்க வேண்டும என்றார் அதில் நிறையத் தமிழ்ச்சொறகளையும் திராவிடமொழிசசொற்களையும் சேரத்துவிட்டால் இறந்த வடமொழி உயிர்பெற்று உலவும் என்று பேசினார். இதறகு எடுததுககாட்டாக 'மணிப்பிரவாளததின்' அழகைக் கூறினார். மணிபபிரவாளததை ஐயர் போறறலாம். ஆனால், அது செத்து மடிநததைக் கணடும் இவ்வாறு பேசியிருப்பது வியப்பைத தருகின்றது. தனித்தமிழ் இயக்கத்தை ஒரு சில பழமை விரும்பிகள இயக்கமென்றும கூறியிருக்கிறார். 'வடமொழி இறநதது; வடமொழி வாழ்க' (The king is dead. Long live the king) என்ற முறையில் வடமொழி இருக்கும்போது

இறந்த வடமொழியை வழக்குக்குக் கொண்டுவருவது அறிவுடைமையாம். ஆனால் உயிருள்ள தனித்தமிழ் வேண்டுவது அறிவுடைமையற்றதாம்! முன்னுக்குப் பின் முரணான பேச்சு. இது தனித்தமிழ் வெள்ளத்துக்கு எதிரில் மணல்அணைபோடுவது போலாகும் தமிழ்க்கொலை வடநாட்டிலும் நடக்கின்றது அதற்குத் துணைபோகும் அறிஞர்களும் தென்னாட்டில் உளர். வடமொழிச் சொற்களைக் கட்டுப்பாடாகப் புகுத்த அரசாங்க ஆதரவில் முயற்சிகள் நடைபெறுகின்றன. இவைகளை முளையிலேயே கிள்ள வேண்டும்.

“ இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து ”

என்று வள்ளுவர் கூறியபடி வருமுன் காப்போராகத் தமிழர் நடந்துகொள்ள வேண்டியது கடன்.

---

## மறைமலையடிகள் மாண்பு

[நெல்லை. திரு. க. சுப்பிரமணியன்]

அயல்மொழிக் கலப்பால் அருந்தமிழ் கெடுமென
மயலற வுணர்ந்த மாணத்கு புலவ!
தனித்தமிழ் இனிக்கும் தன்மையை உணர்த்தியோய்!
இனியார் நினைப்போல் இன்னதை ஆற்றுநர்?
இந்தியை அரசினர் செந்தமிழ் நாட்டில்
நுழைத்தஅஞ் ஞான்றுநீ உழைத்ததை யெல்லாம்
எண்ணினும் எம்முளம் எழுச்சியே எய்தும்
திறம்பெறு புலமைத் தீந்தமிழ்ப் புலவ!
அறப்போர் ஆற்றிநீ அருந்தமிழ் காத்தாய்!
வண்தமிழ் தாழ்ந்தது வடவரால் என்று
வரலாற் றுண்மையை வகைபெற ஆய்ந்தாய்!
இருளிலே மாந்தர் இருப்பதை உணர்ந்தாய்!
உமிழ்கனல் வீரரும் உமிழ்நீர் அமிழ்தெனப்
பகைவர்க் கடங்கிப் பைந்தமிழ் நாட்டில்
வாழ்வதைத் தாழ்வெனக் காழ்பெறக் காட்டி
விழிப்புறச் செய்த வியன்தமிழ்த் தலைவ!
தன்னினப் பற்றிலாத் தமிழர் எல்லாம்
மொழியே வாழ்வின் வழியென விழையார்;
தலைவரைப் போற்றுந் தன்மையை இழந்தே
உறைவோர் தமக்கறி வுறுத்திய நாவல!
மறையார் மலையே! மறைமலை நீயே!

---

# வள்ளுவர் ஓர் உயிர்நூற்புலவர்

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(செல்வி, சிலம்பு-உஅ, பரல்-க, பக்கம்-கசு தொடர்ச்சி.)

மழையை வேண்டாத உயிர்ப்பொருள்கள் எதுவுமில்லை. நீரை விரும்பாதார் யாருளர்? ஒருவருமில்லையன்றோ? நீரின் பண்பை அறிவிற்குறைந்த உயிர்களான புற்பூண்டு மரஞ் செடி கொடிகள்கூட உணர்கின்றன. இவைகள் நீரின்றேல் வாழா; இறந்துபடும். இவைகளுள், மரங்கள் பருத்த உருவின; சின்னாள் நீரின்றேனும், உயிர்வாழ்வன. புற்கள் அத்தகையன வல்ல. நீரின்றேல், ஈரப்பசையின்றேல் வாடித் தீய்ந்து பட்டுப் போகும் தன்மையன. தீய்ந்துபோனாலும் மழை பெய்தவுடன் தலைகாட்டித் தழைக்கும் தன்மையன. மற்றை இயங்கியல் உயிர்களினும் இப்புல் முதலிய நிலையியல் உயிர்கள் வேறுணவின்றி நீரையும் நீரால் ஊறிய பண்பட்ட நிலத்தின் சாரத்தையுமே தம் வேர்களால் உறிஞ்சிக் குடித்துத் தளிர்த்து வளர்கின்றன. மேகம் மழை பொழிந்து நீரைத் தாராது விடின், அவை வாடித் தீய்ந்துபோவதை நாம் பன்னாளும் காண்டுமன்றே? இத்தகையனவே புல்லின் இனங்களான ஏனைய நெற்பயிர் முதலிய எல்லாப் பயிர்களும் என்பது நன்கு தெளியப்படுகின்றது.

ஆகவே, உயிர்நூற்புலவரான திருவள்ளுவர் தாம் ஆக்கியருளிய திருக்குறட் பெருநூலில் உயிர்வகைகளுள் ஓரறிவுடைய புல்லினை எடுத்துக்காட்டி, அது ஊறறிவொன்றேயுடையதென்பதை விளக்கம்பெற உணர்த்தியருளினர். இவ்வாறே ஒவ்வோருயிர்களின் பண்பையும் ஆங்காங்கே உணர்த்தி எடுத்துக்காட்டுவர். அவைகளையும் அவருடன் ஒன்றுசார்ந்து காண்பேம். அவைகளுடன் மக்களையும் ஒப்புரைத்து உணர்த்தும் அவ்வொண்மையையும் கண்டு மகிழ்வேம்.

இப்புல்லின் வகையைச் சேர்ந்தனவே தினையும் பனையும். தினை ஒருவகை உணவுப்பொருள் தரும் பயிர். பனை ஒருவகை மரம். இவ்விரண்டையும் நம் புலவர்பெருமான் தாம் வகுத்த திருக்குறட் பெருநூலில் அறம் பொருள் இன்பமென்னும் மூவகைப் பாலினும் அவைகளின் அளவின் சிறுமை பெருமைகட்கு உவமமாகக் காட்டியுள்ளனர். பனையை நாட்டில் உலக வழக்கில் 'மரம்' என வழங்கினும், நூலுணர்புலமையாளர், அதனைப் 'புல்' வகைகளில் சேர்த்தே அமைத்துள்ளனர். மர வகையையும், புல் வகையையும் காரணம்பற்றியே அவ்வாறு

வகுத்தமைப்பாராயினர். உள்ளிடம் வைரம் (திண்மை) பெற்றவை 'மரம்' என்றும், வெளியிடம், அஃதாவது அதன் மேற்பகுதியான தோல் வைரம (திண்மை) பெற்றவை 'புல்' என்றும் வகுத்தனர். புல், நெல், பனை, தெங்கு, ஈந்து முதலியனயாவும மேலே மட்டும வைரங்கொண்டனவாய், உட்பகுதியிடமெல்லாம் மெல்லிய சோற்றின்பகுதியும் துளையுமகொண்டு இருப்பதைக் காணலாம். அச் சோற்றை யெடுத்துவிட்டால் அதனகத்து வெறும புழையாகக் காணப்பெறுவதை நாம் காண்டுமன்றே. மரங்களில் மேற்பட்டையை யெடுத்துவிட்டால் உட்பகுதியாவும திண்மையாக இருப்பதைக் காண்டுமன்றோ? இவ்வகை வேறுபாட்டை, நுனித்தறிந்த பண்டைப் பேரறிஞர் தொலகாப்பியனார்,

[1]"புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப'

என, அவைகளின் தன்மையை தெற்றென உணருமாறு சுருங்கச் சொல்லி விளங்கவைத்தருளினர். பின்னரும் அப்புல்லின் உறுப்புக்களான இலை, இதழ் முதலியவற்றையும இன்னின்ன சொற்களான் வழங்கவேண்டுமென, அறுதியிட்டு உறுதிப்படுத்துவாராயினர். அவை,

[2]"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.'

என்று புல்லொடு பட்டவைகளை விளங்க உணர்த்துதல் காண்க.

இனி, மரத்தொடு சார்ந்த கவடு, இலை, அரும்பு முதலியனவற்றையும் எவ்வாறு வழங்கவேண்டுமெனபதை விளங்க உணர்த்துவதையும் நன்கு தெளியலாம அவை,

[3]"இலையே தளிரே முறியே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனைஉள் ளுறுத்த அனையவை எல்லாம்
மரனொடு வரூஉம் கிளவி என்ப.'

என, விளங்க எடுத்துக் கிளத்தலால் உணரப்பெறலாம்.

இவ்வாறு புல்லையும் மரத்தையும் வெவ்வேறுபட்ட அவைகளின் வகைமைகொண்டு உணரப்பெறலாம். புற்களுக்குக் கிளைகள் இன்மையும், மரங்களுக்கு அவைகள் உண்மையும் நாம் காண்கின்றோமன்றோ? மரங்களில் பற்பல்வகைக் கோடும்,

1, 2, 3. தொல். மரபியல்: அரு, அசு, அஎ.

கவடும் விரிந்து, அரசர்களும் தம் பெரும்படையொடு தங்க நிழல் தந்துதவுதலையும், பனை, தெங்கு போன்ற புல்வகைகளில், கோடும, கவடுமில்லாது ஒரே தலையொன்றேகொண்டு, தம்கீழ்த் தங்கவருவார்க்குப் போதிய அளவு நீழல் தாராது பொழுதுடன் நீண்டு செல்லலையும் அறிதுமன்றோ?

இவைகளின் நிலையை நன்கு தெரிந்து தெளிந்த அரசர் பெருமான் அதிவீரராம பாண்டியர், தாம உலகு பயன் கருதி அருளிய நறுந்தொகைக்கண்,

[1]'தெள்ளிய ஆலின் சிறபழத தொருவிதை
தெள்நீர்க கயததுச சிறுமீன் சினையினும
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதோ புரவி ஆட்பெரும படையொடு
மனனாக கிருக்க நிழலா குமமே.'

எனவும்,

[2]'தேம்படு பனையின திரள்பழத தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும
ஒருவாக கிருகக நிழலா காதே.'

எனவும வரும் இவறறுள்,

மரததின் தன்மையையும் புல்லின் தன்மையையும் எடுத்துக் காட்டிய—விளககிய—திறபபாடு போறறற்குரியது.

செநநாவலர், தாமவகுத்த அறக்கடலாம் திருக்குறள் நூலில் 'செய்நநன்றியறிதல்' என்னும் அதிகாரமும ஒன்றும. அதில் செய்த நன்றியின சிறிய அளவிற்கும, அதனை அறியும் கடப்பா டாகிய பேரளவிற்கும உவமம உணர்தத எண்ணினர். அவர் கண்முன் தோற்றமளித்தன, தாம வாழும இம் மண்ணுலகமும், அவ்வுலகப் பொருளகளைக் கண்ணுறக்கண்டு தெளியத துணை யாக வெளிசசம தரும் ஞாயிறும திங்களும் விளஙகும் வான மும், மிக்க ஆழங்கொண்டமைந்த கடலுமாம். இவைகளைத் தம் குறட்பாக்களில் முறையே செய்ந்நன்றிப் பெருமைக்கு,

'காலததி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

எனவும்,

'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூககின்
நன்மை கடலின் பெரிது'

எனவும்,

1, 2. வெற்றிவேற்கை: கஎ, கசு.

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல அரிது'

எனவும் நயமபட விளக்கியருள்வாராயினர்.

செய்ந்நன்றியாவது, ஒருவன் மற்றொருவனுக்குச செய்யும் உதவி இது, பின் தனக்குக் கிடைக்கும பயனைக் கருதியும் ஒருவன செய்யலாம, கருதாதும செயயலாம, ஆனல், இவற்றுள பயன்கருதாது ஆற்றும் உதவியே உயாநதது, சிறந்தது. இச் செயல் பெரியாாமாட்டு மட்டுமே தோன்றும உயரிய பண் பாகும்.

ஆண்டவன்பால் அழுது அழுது தொழுது அன்புபூண்ட மணிமொழிபபெருமான இப்பெருமையை நனகுணாநது, தம் பால் யாதொரு பயனும் எதிாபாராமல் அருளால தமமை ஆட் கொண்ட இறைசிவபெருமானின் பெருங்கருணை த திறத்துககு மகிழ்நது நெஞசம் நெக்குருகி,

[1]'நானாடி அணைவானொரு நாயக்குத்தவி யிட்டிங்கு
ஊனருடல் புகுந்தான்உயிா கலநதானுளம் பிரியான்
தேனாசடை முடியானமனனு திருப்பெருந்துறை உறைவான்
வானோாகளும அறியாததோா வளமீந்தனன் எனககே'

எனவும், பின்னரும் தாம அருளிய திருவாசகமறையிடத்தே கூறிக்கூறி நன்றி பாராட்டுதலால் அறியலாம்.

எனவே, பயன்கருதாது ஒருவன் செய்த உதவிக்கு நிலத் தையும் கடலையும் நாயனா உவமமாக ஆக்கிக் காட்டினர்.

ஒருவன் மற்றொருவனுக்கு ஒன்றும் உதவிசெய்யாதிருக்க, மற்றொருவன் தானே முன்வந்து உவநது செய்ததற்கு நிலமும் ஒவவாதென்றார் நிலததின் தன்மை ஒவ்வொருவாக்கும் அவா தம் உழைப்பின் அளவிற்கே பயன்தரவல்லது, அஃதாவது உழவுத்தொழிலை மேறகொணட ஒருவன், தன்பயன் கருதி, நிலத்தை உழுது பண்படுத்தி, உரமிட்டு நீாபாயச்சிக, களைகட்டுக் காவல்செய்து, நாள்தோறும அதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து வருவானுனல், அவன் பாடுபட்ட அளவிற்கு அந்நிலம் தானியத்தை விளைததுத் தருகின்றது. அதுபோன்றே, நன்றி யறிவான் தான்பெற்ற உதவியை அவ்வுதவியின் அளவிற்கு உதவிசெய்தவனுக்குக் கைம்மாருக ஒன்றுக்குப் பலவற்றை உதவியாக அளிக்கின்றுன். ஆனல், யாதொன்றும் தனக்குக் கிடைக்குமென்று எதிர்பாராது செய்த உதவிக்கு உழைத்த

1. திருவாசகம், உயிருணணி : உ.

உழைப்புக்குத் தகப் பயன்தரும் நிலம், எங்ஙனம் ஒப்பாகும்? இதனானே நடுத்தரமாணவர்க்கு இலக்கண நூலார் நிலத்தையே ஒப்புரைத்தனர் இதனால் 'நன்றி.......ஞாலத்தின மாணப்பெரி' தென்றார். அன்றி, மண்ணுலகத்தை இவ்வளவிற்றென்று கணக்கிடலாம, எல்லை காணலாம, இதற்கு அளவெல்லை இல்லை யென்றதுமாம் அஃதல்லாமலும ஒருவன், மற்றொருவற்குத் துன்பமோ கேடோ வந்தகாலத்தே அவைகளை நீக்குதற்கு ஒருவன் செய்த உதவி மிகச சிறிதாக இருக்கலாம. அது, செய்த காலத்தின் பயனைநோக்கி, அதன் பெருமைக்கு வரையறை இவ்வளவிற்றெனக் காண்பதற்கில்லை

எடுத்துக்காட்டாகக் காத்தான் என்னும் ஒருவன், நீர் வேட்கையால் துவக்குண்டு அதுகிட்டாது சாகுந்தறுவாயில் கிடந்தான் சாத்தனென்பான், அதைக கண்டான். விரைந்தோடி, நீர்தேடிக் கொணர்ந்து அவன வாய்பபெய்து அவன் உயிரை உடலினின்றும் பிரியாது காப்பாற்றினான். இந்நன்றியை மறவாது சாததன்பால் அன்புகொண்ட காத்தான், அவனுக்குத் தன்னாலியன்ற பற்பல உதவிகளைக் கைமமாறாகக் கடமை கருதிச் செய்கின்றான் அவை, இவன் செயத சிறு உதவிககுப பன்மடஙகு விரிநதன ஆனாலும, காலத்திற் செய்த கைம்மாறு கருதா அக் கடப்பாடடினமுன, கதிரவன்முன் மின்மினி போன்று மிகமிகக் குறைந்ததாகின்றது. இதனாலேயே கைம்மாறு கருதாது கடமையால அன்புமேலுநதச் சேயக்குச் செய்யும் தாயின் தொண்டு, ஒப்புரைக்க ஒண்ணா ஒனறாக ஒளிதலை அறிகின்றோம்.

சாததன் காத்தானுக்குத தேடிக்கொண்டுவந்து நீரூட்டாதிருபபின, அவன இறநதுபட்டிருப்பானன்றே. காத்தான் அந்நன்றி கருதிச சாத்தனுககு எததனை உதவி செய்தாலும் அவை சாததன்செய்த உதவிககு அணுத்துணையும் ஒவ்வா! ஏனெனின்? இது, செய்ததற்குச் செய்யும் உதவி ; அது, செய்யாமற் செய்த உதவி. இவவாறே கடலும்.

கடல், மிக்க பெருக்கமுடையது; விரிந்தது, ஆழியது; அழியாதது, குறையாதது. இததகைய கடலினும செயயாமற் செய்த நன்றி விழுமிது அழியாதது, குறையாத தன்மைதது. இதனால் 'நன்மை கடலின் பெரி' தென்றார, நம் வள்ளுவனார

இப்படி உவமஙகண்ட வளளுவர் மனம், இவவளவோடு அமையவிலலை அவ்வுதவிக்கு ஈடாக உலகம்போனற மிக அளவுடைய பொருளகளை ஈநதாலும், வானம்போன்ற அளவில்லாத பொருள்களையெல்லாம் வாரிவாரி வழங்கினாலும் அவ்

வுதவிக்கு ஒவ்வாது; அளவிலடங்காது; உயர்ந்தது என்று கட்டுரைக்கின்றார். இதனை அவர் சொன்னா, 'வானகமும் வையகமும் ஆற்றல் அரிது' என்றது.

பின்னர், ஒருவர் உதவி செய்யலாம் அவ்வுதவியைப் பெற்றோர் அவ்வுதவியின் பெருமையை அறிவது பதினாயிரத்தில் ஒருவரேயெனின், அது, மிகையன்று. உதவி செய்தோரை அதைப் பெற்றோர மதிப்பதில்லை. இனிமை செய்தவர்க்கு இன்னாவியற்றலே கடனாகக் கொண்டுளது பேதையருலகம். இதனை நோக்கியே சமணமுனிவரும்,

> 1 'எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாமேல்
> எழுநூறும் தீதாய் விடும்.'

என, உண்மையுணர்ந்தோதினார் அதனை உணர்வோரே மக்கட் பிறவியின மாண்பயன் எய்தியோராவர். இதனை விளக்கவே தினையையும் பனையையும் அளவாக எடுத்துக் காட்டினார்.

தினையும் பனையும்

தினை, ஒருவகைப பயிரென்பது முன்னரே பெறப்பட்டது. இங்கே தினையென்றது, பயிரையன்று. அதன் விதையை; தானியத்தை. அது, மிகச் சிறுவடிவினது. பனை, அதைநோக்க எத்தனையோ கோடி மடங்கு பருமையது. 'உப்பிட்டாரை உள்ளளவும் நினை' என்பது, நம்நாட்டுப் பழமொழி. உப்பு ஏழை முதல் செலவர்வரை சென்று சேர்ந்து பயன் நல்குவது; யாவர்கரும் அஃது இன்றியமையாது வேண்டப் பெறுவது. ஆனால், மிக எளிதில் வாங்கக் கொடுக்கக்கூடியது. அதுவும்கூட ஒருவனுக்குக் கிட்டாத நிலை ஏற்படலாம். அதனை அத்தருணத்தில் கொடுத்துதவியவரை மறத்தலாகாது என்பதை இப்பழமொழி உணாத்துகின்றது.

இதனை, வள்ளுவர் உயிர்நூற் புலவராதலான், உயிர்ப் பொருளகளையே உவமமாக எடுத்துக்காட்டி விளக்கியருளினார்.

தினைபபுல் த்ானியம் கடுகின்அளவே பருமையானது. அதைப் பனையின் வடிவத்துக்குப் பெருக்கிக்காண எண்ணினால எத்தனையோ பலகோடிக் கணக்கான தானியமணிகள் வேண்டும். அதுபோல் ஒருவன் காலத்தாற் செய்த நன்றிக்கு அளவோ உதவியோ அதறகு ஏற்ற அளவினவாக இல்லை. அதைப் பெறுவோர் மனத்தின் அளவே அளவென்று கூறுவாராய் இவ்வாறு இப்பனையையும தினையையும் கொண்டு காட்டுவாராயினார்.

(தொடரும்)

1. நாலடியார்: கூஉ.

# மாங்குடி மருதன் இயலோவியம்

[புலவர், திரு. பொ. வே. சோமசுந்தரனார்]

(சிலம்பு-௨௭, பரல்-௧௨, பக்கம்-௫௬௧ தொடர்ச்சி.)

உயிர்களையே அன்றி, உயிரில் பொருள்களையும் தம்மன்னற மாண்பாலே தம்வழிப்படுத்து நன்னெறியுய்க்க வல்ல சான்றோராகிய மன்னர் மரபிற் பிறந்தோனே! என்னுங் கருத்துடைய இம்முதல் விளியோடமையாது, மேலும் பன்முறை மருதனார் நெடுஞ்செழியனை விளிக்கின்றார். உயர்ந்தோர் மருக! நெடியோனும்பல்! பொருந! கொற்றவ! வெல்கோவே! புகழ்வேந்தே! நசைப்பொருந! போரேறே! குரிசில்! என, ஒன்பதுமுறை நெடுஞ்செழியன் விளிக்கப்படுகின்றான். இவ்விளிகள் கூறியது கூறலாக வாளா வந்தனவல்ல, இவைகள், நெடுஞ்செழியனின் புகழ்மாலை ஒவ்வொன்றற்கும் முடிமணியாக மிளிர்கின்றன. இவ்வொன்பது விளிகளும் ஒன்பது வாகைமாலையின் முடிமணிகள். அவ்வாகை மாலைகள் அனைத்தும் வெவ்வேறு வகையான காட்சிகளைக் காட்டும் சொல்லோவியங்கள்.

இவற்றுள், அடுத்து இரண்டு போர்க்களக் காட்சிகள் காணப்படுகின்றன ஒன்று, போர்நிகழ்ந்த பின்னர்க் காணப்படும் படுகளக் காட்சியாகும். இரண்டாவது, போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் களக்காட்சி; முன்னையது, பாண்டியன் நெடுஞ்செழியன் படைஞரின் தெறற்சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகின்ற மறக்களவேள்வி. ஏனையது மாங்குடி மருதனார் தாமே நேரிற் கண்டதாகிய தலையாலங்கானத்துப் பெரும்போரின் சொல்லோவியம் அவற்றுள,

"பிணக்கோட்ட களிற்றுக்குழும்பின
நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச் சீர்ப்
பிணையூபம் எழுந்தாட
அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்டலை அணங்கடுப்பின்
வயவேந்த ரொண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பின்
தொடித்தோட்கை துடுப்பாக
ஆடுற்ற ஊன்சோறு

நெறியறிந்த கடிவாலுவன
அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
அமர்கடக்கும வியன்றானை
............பொருப்பிற பொருந !"

என்பது மறக்கள வேள்வியின் ஓவியமாகும்.

களிற்றியானைகளின் பிணங்கள் யாண்டும் குவிந்து கிடக்கின்றன. அவ்வியானைபபிணஙகளின் கோடுகளிடததேயும், மறவர்பிணஙகள கோபபுண்டு கிடக்கின்றன அளவிறநத ஊன்உணவைக் காண்டலும் பேயமகளிர் மிகவும் மகிழ்ச்சியுடையராய திணஙகளை வாய்நிரமபப பெய்துகொண்டு ஆடிப் பாடித் துணஙகையிடுகின்றனா. யாணடும குறைததலைப் பிணங்கள் எழுநது ஆடுகின்றன; இவை ஆடுதல் அப்பேய் மகளிரின் பாடறகியையக கூததாடுதல்போன்று தோன்றுகின்றது.

இக் காட்சியைககண்டு யாரே தாம் அஞ்சாதாருளர்! அந்த அஞ்சு வந்த போர்ககளத்தின் கண்ணே, மறப்பேய்கள் வீரர்களுடைய கரிய பெரிய தலைகளானே அடுபபுக்கோலி, மறமன்னருடைய ஒளளிய குருதியை உலைநீராக வார்த்து, அவவடுப்பிலேற்றி மன்னருடைய சினததீயைக் கொளுவி எரித்து, மறவருடைய தொடியுடைய கைகளாகிய துடுபபாலே துழவி, ஊன் சோறடுகின்றன. இபபேய்களுளளும், ஊன்சோறட்டுக் கை தோநத மடைப்பேய்கள உளளன. அவைகளே ஊன சோறடவும், அட்டசோறறை வரிசையறிநது வழங்கவும் பயின்றுள்ளன. முறைதவறி வழங்கிவிட்டால், அக்களததிலே அப்பொழுதே பேய்ப்போர் மூண்டுவிடும் போலும்! அபபேய்களோ அடியொதுஙகிப் பிற்பெயரா மறபபேய்கள். மறவரின் குருதியைக் குடிதது, மறவர் ஊன்சோற்றையே உண்டு உண்டு வளாநத அபபேய்களும, அடியொதுஙகிப் பிற்பெயரா ஆண்மையுடையன வாதல் இயலபே யன்றோ!

உலகிலே யாண்டேனும போர் நிகழ்ந்தால், அப போர்க் களத்தே வீழ்ந்த மறவர்களின் குருதி, ஊன் முதலியவற்றை நாய், நரி, கூகை, பருநது முதலியன உண்பதே வழக்கம ஈண்டு, மருதனார் மறக்களததே நாயும, நரியும கண்டிலம! கொற்றவையின் படைஞராகிய கூளிகளே இக்களத்தே வீரர்குருதியை-ஊனை உண்டு மகிழக் காண்கினறேம். வீரர்குருதி- வீரத் தெய்வத்திற்கே பலியாகும் உயர்வுடையது. அதனை நாயும் நரியும் தீண்டுதல் கூடாதென்பது நல்லிசைப்புலவர்களின் கொள்கை. ஆதலானே, உலகியலை விடுத்துப புலவர்கள் தம்

பாடல்சான்ற புலனெறி வழக்கில் இம் மறப்பேய்களையும், அவற்றாற் களவேள்விகளையும படைத்துக் கொள்வாராயினர்.

இனி, இக்களவேள்வி போன்ற எத்தனையோ களவேள்விகளைச் செய்துள்ள வியனாற்றலையுடையன் நெடுஞ்செழியனை (அல்லது அவன் முந்தையோர் உடையர் எனினுமாம்) ஆதலால், இத்தகைய வியனாற்றலைத் தலைவனே! என மருதனார் அம்மன்னனைப் புகழ்தல் இத்தொடரின் வெளிப்படைப் பொருளாயினும், இத்தகைய மறக்களவேள்வி பயனற்றதுகாண், இத்தகைய செயலிலேயே ஈடுபட்டு அரிய மானிடயாக்கையாற் பெறும் பயனைப் பெறமுயலாமல் வீணே கெடுகின்றனை! ஆதலால், இப் பயனிலலாச் செயலைவிட்டொழிதி! உயிர்க்கு ஆக்கமாக யான் கூறுவதைக் கேள்! எனச் செவியறிவுறுத்தலே புலவரின் நோக்கமாகும்.

யான், எனது என்னும இருவகைச் செருக்கினும் முன்னிற்கும் செருக்கிற்குக் காரணமாகிய இவ்வியாக்கைதான் என்னை? நாயும, நரியும, கூகையும், பருந்தும், கழுகுங் கூடி புண்ணுதற்குரிய ஊன்பிண்டமே யன்றோ!

> "விழுககொடு வெண்ணஞ் சல்லா வுகிரமயிர உமிழ்கட் பீளைப்
> புழுப்பயில குரம்பை பொல்லாத தடி தடிக் கீழ்நத போதில்
> விழித்தியார நோக்கு கிற்பார,"

இவ்வியாக்கையின் நிலையுதலில்லா இழிதகைமையை நீயாற்றிய எண்ணிலாப போர்க்களங்களிலே, நின் பகைவர் யாக்கையில் வைத்துக் கண்டிலையோ! மறமன்னனே! ஆதலால், இவ் யாக்கையிற் பற்றுடையையாய்ப் பயனற்ற இம்மறக்கள வேள்வி செய்தலை இனி விடுக! எனக் காஞ்சி கூறுதற்கும் இவ்வடிகள் இடந்தருதலறிக.

இங்ஙனமே, மேலும் இவர் கூறும நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்புகள் எல்லாம், உலகின் பல்வேறு வகை அழிவுகளையும கூறுவனவாகி, ஒருவழிப் புகழ்மாலையாகவும், ஒருவழிக் காஞ்சியுணர்த்தும செவியறிவுறுவாகவும் அமையும் நுணுக்கம் உணர்ந்தின்புறுக.

## ௫. தலையாலங்கானத்தே மருதனார் கண்ட போர்நிகழ்ச்சி

நெடுஞ்செழியன் பால்மணமாறாத இளம் பருவத்தே கோமுடிகொண்டு அரசு கட்டிலேறினான் என்றும், அப்பொழுது இவனது பேராற்றலை அறியாத மன்னர் பலர், இவனை வென்று இவன் அரசினைக் கைப்பற்றக் கருதி இவன்மேற் படையெடுத்

தனர் என்றும், அச்செய்தி யறிந்த நெடுஞ்செழியன் மாங்குடி மருதனையுள்ளிட்ட சான்றோர் அவையில் வஞ்சினங்கூறி, அம் மன்னரைத் தலையாலங்கானத்தே எதிர்த்தனன் என்றும், செழியன் வரலாற்றிற் கூறினும் அவன் வஞ்சினம் மொழிந்து போர்க்குப் புறப்பட்ட பின்னர், அவன்பா லன்புமிக்க மருத ளுரும் அம்மன்னன் அறியாதே சென்று அப் போர்க்களத்தின் அண்மையிலே மறைந்திருந்து அப்போரினைத் தாமே நேரிற் கண்டனர் ஆதல்வேண்டும். அங்ஙனம் தாம் கண்ட காட்சி முழுதும் கற்போரும் தம மனக்கண்முன்னே கண்கூடாகக் காணுமாறு அப் பெரும்போர் நிகழச்சியை ஒருசில அடிகளாலே ஓவியப்படுத்துதம அழகினை,

"விழுசூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளும் உயர்தோன்றல
வினைநவின்ற பேயானை
சினஞ்சிறந்து களனுழக்கவும்
மாவெடுத்த மலிகுரூஉத்துகள
அகல்வானத்து வெயில் கரப்பவும
வாம்பரிய கடுந்திண்டோ
காற்றெனக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தா
தோணமுறையான வீறுமுற்றவும்
இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச செருவென்று
............ ... ..... ...............
ஆலங்கானத்து அஞ்சுவரவிறுத்து
அரசுபட அமருழக்கி
முரசுகொணடு களம்வேட்ட
அடுதிறல் உயா புகழ்வேந்தே,"

எனவரும் இவ்வடிகளை ஓதியும், உணர்ந்தும், காண்க.

இப்போர்க்களக் காட்சி, போர்நிகழுங்கால் சிறிது சேய்த் தாக நின்று காண்போர்க்குத் தோன்றுங் காட்சி போல்வதறிக. கண்டோர் இவை மலைகளோ! என்று மருளுதற்குக் காரணமான பேருடல் படைத்த யானைகள் அணிவகுத்து நிற்கின்றன. அவற்றின் முகத்திலே அணியப்பட்ட சிரிய முகபடாமும, பொன்னொளியன்ற நெற்றிப் பட்டங்களும் பளபளவென மின்னு கின்றன. இவ்வணிகள் இப்படை நல்குரவறியாச் செல்வச்

செழிப்புடைய படை என்றற்குச் சான்றுகளாம். என்னை, “சிறுமையும் செல்லாத்துனியும் வறுமையும் இல்லாயின் வெல்லும் படை” என்பது தமிழ்மறை. ஈண்டு யானைகளின் விழுச்சூழியும், விளங்கோடையும், செல்வச் சிறப்பை விளக்குவன வாதலுணர்க. நன்கு போர்ப்பயிற்சி மிக்க யானைகளாதலின், “வினைநவின்ற பேயானை” என்றார். அவை தம்மெதிரே பகைப்படை வருகை காண்டலும் சினமிகுக்க கண்கள் தீக்கால்வனவாயின. பாகர்கள் போர்த்தொழிலிலே அவற்றை ஏவியவுடன் பகைப்படையுட் புகுந்து போருழக்கத் தொடங்கிவிட்டன

இனி, மற்றொருசார் வானம் இருண்டுவிட்டது, முகில்கள் வானத்தே பரவி ஞாயிற்றின் ஒளியை மறைத்துவிட்டனவோ! இல்லை. ஆண்டுப் போர்புரியும் புரவிகள் விரைந்து பாய்தலாலே எழுந்த நுண்டுகள் வானம் முழுதும் பரவி இருள்படுத்தியது. ஞாயிற்றுமண்டிலம் துகள்களாலே மறைக்கப்பட்டது! அம்மம்ம! இத்தனை துகளெழும்படி அப்புரவிப் படை எவ்வாறுதான் போருழக்குவனவோ! யாரே அறியவல்லார்!

மற்றொருசார், சூறைக் காற்றடிப்பதுபோன்ற தோற்றம். உண்மையில் அங்குச் சுழல்வது காற்றன்று; தேர்ப்படை; தேர்களே உருத்தெரியாதபடி விரைந்து சுழல்கின்றன! அவற்றை இழுக்கும் குதிரைகள் தாவிப் பாய்கின்றன.

மற்றொருசார், காலாண் மறவர் கடும்போர்! தம் தோள் வலியாலே பெரும்பாலும் பகைப்படையை அடர்த்து முடிவில், வெற்றி! வெற்றி! நெடுஞ்செழியனுக்கு வெற்றி! என முழங்குகின்றனர். இக்கன்னிப் போரின் முடிவு என்ன? இருபெருவேந்தரும், ஐம்பெருவேளிரும், இவர்தம் நாலவகைப் படையும், பாழ்பட்டழிந்தனர். இதனைச் சேய்மையினின்று கண்ணுற்ற மருதனார் நெடுஞ்செழியனின் அடுதிறல் உயர்வை வியந்து “மரந்தின்னூஉ வரையுதிர்க்கும் நரையுருமின் ஏறு போல்வது நெடுஞ்செழியனின் அடுதிறல்,” என உவமை எடுத்தோதினர். இவ்வுவமையின் மாண்பினை ஆழ்ந்து நோக்குமின்!

சிறிது நேரத்திற்குமுன் தங்கண்ணெதிரே தழைத்தோங்கி நின்ற காடுகளும், மலையும், ஒரே நொடிப்பொழுதில் சாம்பராகித் துகளாகி அழிந்து பாழ்பட்டன. ஒரேஒரு இடி; பேரிடி; அவ்விடி வீழ்ந்த மறுநொடியில், தழைத்த பசுமரங்கள் சாம்பராய்ப் பறந்தன! நெடிய மலைகள் நுறுங்கி உருண்டன! இப்பேரிடியின் செயல்போன்றே நெடுஞ்செழியனின் போர்ச்செயல் மருதனார்க்குத் தோன்றிற்று. ஆதலால்,

"மரந்தின்னூஉ வரையுதிர்க்கும்
நரையுருமி னேறனையை,"

என்னும் இவ்வுவமையால் அம்மன்னன் அடுதிறலைச் சிறப்பிக்கின்றார்.

இனி, ஈண்டு மதுரைக் காஞ்சியிற் கூறப்பட்ட இவ்விரு வேறு களக்காட்சிகளும், அப்புலவர் கண்கூடாகக்கண்ட தலையாலங்கானத்துப் போர்களக்காட்சியே என்றற்கு, இவரே அப்போர் நிகழ்ந்தகாலத்தே பாடிய புறப்பாட்டின் சொற்பொருள்கள் ஈண்டுள்ள சொற்பொருள்களோடு பெரிதும் ஒற்றுமையுற்றிருத்தல் சான்றும். அதுவருமாறு;

"நளிகடல் இருங்குட் டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும
களனகற்றிய வியலாங்கண
ஒளிறிலைய வெஃகேந்தி
அரைசுபட அமருழக்கி
உரைசெல முரசு வெளவி
முடித்தலை அடுப்பாகப்
புனற்குருதி உலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம வேட்ட அடுபோர்ச் செழிய." (புறம்: உ௬)

எனவரும்

இனி, ககூ0-ம் அடிவரை நெடுஞ்செழியன் வடநாட்டரசர் பலரையும் வென்று, விரிந்த இடமுடைய நாவலம் பொழில் முழுதும் அடிப்படுத்திக் கொண்ட புகழைப் பலபடப் பாரித்து இப்புலவர் பெருமான் ஓதுகின்றனர். போரிடுதலும், பகைவர்நாட்டைக் கோடலும் அரசர்க்குரிய செயல்களே யாயினும், மனச்செருக்காலே இப்போர்த்தொழிலையே பெரிதும் மேற்கொண்டு தம்மாயுளகாறும் உலகத்தைப் போர்ப்படைகளாலே உழக்கித்திரிந்த அரசரும் பலருளர். இம்மிகைச் செயல் சான்றோர் உளத்தைப் புண்படுத்துமொரு புன்செயலேயாகும். இத்தகைய அரசர்களைச் சான்றோர்கள் இடைமறித்து இம்மறக்கள வேள்வியினின்றும் மாற்றி அருள் கெழுமிய அறக்கள வேள்வியே செய்யும்படி செவியறிவுறுத்துத் திருத்தியுமுளர்.

(தொடரும்)

# தமிழ்முனிவன் திருமலை

## அன்றும் இன்றும்

[கணியர், டாக்டர் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை]

அன்று:

கடலை ஆடையாக உடுத்த இம் மண்ணுலகத்திலேயே முதன்மை பெற்று விளங்கும் மலைகள் நமது இந்தியாவிலேதான் இருக்கின்றன. கங்கை, சிந்து முதலிய பெரிய ஆறுகளுக்குப் பிறப்பிடமாக உள்ள இமைய மலையைப் போலும் பெரிய மலை இந்த உலகத்திலே வேறு எங்கே இருக்கிறது? அதனுடைய உச்சியைக் காண அறிஞர் பலர் வீர உணர்ச்சியுடன் விடாது முயன்றும் அஃது இன்னும் முடியாத செயலாக அன்றோ உளது? பார்ப்பவர் அச்சத்தாலும் வியப்பாலும் இமையாது பார்த்து நிற்கும்படி செய்யும் பெருமையுடைமையினாலேதான் புலவர் இதனை இமையம் என்று வழங்கினர் போலும்! இமம் என்பது பனி, பனிக்க, அதாவது நடுங்கச் செய்தலினாலே பனி என்ற பெயர் ஆயிற்று. பனித்தலின் முதிர்ந்த நிலைமையே இமையாது நிற்கும் நிலை; அதனைச் செய்தலினாலே பனி இமம் எனப்பட்டது போலும்! இமை, இமைப்பு என்பன ஒரு பொருட் சொற்கள்; இமைப்பு என்பது பேரொளி, பகலவன் கதிரொளி படும்போது இமத்தால் மூடியிருத்தலினாலே கண்ணைப் பறிக்கும் பேரொளியுடன் இம்மலை விளங்கும். அதனால் பேரொளி விளக்கம் உடையது என்னும் பொருளில் இமையம் என்ற சொல் ஆயிற்று என்று கொள்ளுதலும் ஒருதலை.

இமையமலை இவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், அது சிறிது காலத்திற்கு முன்புதான் தோன்றியதெனக் கல்நூல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்; அவர்கள் அம்மலையின் கல்லை ஆய்ந்து பார்த்தபோது அது சில காலத்தின் முன்புதான் அமைந்திருக்கவேண்டும் என்ற உண்மை வெளியாயிற்று. அது சில நூற்றாண்டுகளுக்கு முன் கடலினுள்ளே முழுகியிருந்தது என்பதை அம்மலைமிசைக் காணப்பெறும் கடல்வாழ் உயிர்களின் உடற்கூறுகள் முதலிய சான்றுகளைக் கொண்டு அறிஞர் நிலைநாட்டுகின்றனர்.

"ஒப்புயர்வற்ற இமைய மலையின் நிலைமையே இவ்வாறாயின் வேறு எம்மலைதான் முதலில் தோன்றிய பெருமையுடையது?" என வினவின், அது தண்டமிழ் நாட்டின்கண் உயர்ந்து விளங்குகிற பொதிகைமலையே. இதுவே தமிழ்முனிவன் வாழும் திருமலையாம். கல்நூல் ஆராய்ச்சியாளர் இம்மலையின்

கல்லை ஆராய்ந்து இம்மலைதான் உலகத்திலேயே மிக முதியது என்று அறுதியிட்டுரைக்கின்றனர் உயிர்நூல் ஆராய்ச்சிப் புலவர்கள் மக்கள் முதலில் தோன்றிய இடம் எனக் கூறும் தமிழகத்தின் ஒரு பகுதியாக இம்மலை அமைந்திருக்கிறது. ஆதலின் இமையமலையினும் தொன்மையில் முதன்மை பெற்றுப் புலவர்களால் பெரிதும் புகழ்ப்பெற்றது பொதிகைமலையே என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குவதாயிற்று.

“சந்தனப் பொதிகைத் தடவரை”

என்றார் புலவர். சந்தனம் முதலிய மரங்களினாலே பொதிந்து வைக்கப்பெற்றது பொதிகைமலை. இது பொதியம் என்றும் பெயர் பெறும். பொதி என்ற சொல்லுக்குப் பிணிப்பு, தொகுதி, முளை, அரும்பு என்ற பொருள்கள் இருக்கின்றன. இவைகளினால் தீப்பிழம்பாகச் சுழன்றுகொண்டிருந்த பூமியில் பல அணுக்கள் ஒன்றாகத் தொக்குப் பிணிக்கப்பட்டு இறுகிய முதல் இடம் இது என்பதும், செடி கொடிகள் முளைப்பதற்கும் உயிர்கள் அரும்புவதற்கும் தகுந்த முதல் இடம் ஆனது இது என்பதும் அறிஞர் ஆராய்ச்சியில் தோன்றுவன. இம்மலையிலிருந்து தோன்றும் தென்றற்காற்று சந்தனமரங்களிற் படிந்து அவைகளின் நறுமணம் கலந்து உலாவிவரும்போது தமது உடலில் வீசப்பெற்றோரே நல்வினையாளராவர். “சிவபெருமானார் தாம் கூத்தாடும்போது தோன்றும் இளைப்பை நீக்கிக்கொள்ளும்பொருட்டு, ஆரம் மென்கால் திருமுகத்திடைவீசி மடுக்கவும் தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ தென்திசை நோக்கி அடுக்கவந்து உவந்து ஆடுவார்’ எனத் திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதியார் கூறுகின்றார் இம்மலையை அடுத்துள்ள திருநெல்வேலியில் வந்தருளிய சைவசமய ஆசிரியராகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தமது தேவாரத்திலே ‘தென்றல் வந்து உலவும் திருநெல்வேலி’ என அருளிச் செய்திருக்கின்றார்.

இச்சந்தன மரங்களை அன்றி, ஏனைய தேக்கு, வேங்கை, மா முதலிய மரங்களெல்லாம் இம் மலையில் வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்து நெருங்கியிருக்கின்றன. பெரிய பெரிய மரங்களெல்லாம் வெட்டப்பட்டு மலை காடுகளெல்லாம் பணம்பற்றி அழிக்கப்படுகிற இக்காலத்திலுங்கூடப் பகலவனது ஒளி நுழையப்பெறாத பூமரச்சோலைகள் இம்மலைமேல் அளவிடற்கரியனவாய்க் காணப்பெறுகின்றன. இம்மரச்சோலைகளே பொதிகைமலையின் கைகளைப்போல மேலே போகின்ற மேகக் கூட்டங்களையெல்லாம் பிடித்து, அங்குமிங்கும் அசையவிடாமற் பிணித்து, மிகுதியாக மழைபொழியச் செய்கின்றன.

யானைகள் மந்தை மந்தையாகக்கூடி மேய்ந்து திரிகின்ற இப் பொதிகையிலே தண்தமிழ்முனிவராம அகத்தியனார் எழுந்தருளி யிருக்கின்றனர். அவருக்குப் பழைய பாவநாசம் என்னுமிடத்தில் ஓர் அழகான கோவில் திகழ்கிறது. அவருக்கு அம்பா சமுத்திரம் என்னும் ஊரிலும் ஒரு பெரிய தனிக்கோவில் இருக்கிறது அவர் பல அன்பர்களுக்கு நலவரம தந்து வாழ்விக்கும பெருமையுடையவர். அவர் வாழும் பொதிகை முடியிலிருந்தே தான் பொருநைப்பேராறு தோன்றுகிறது தண்—குளிர்ச்சி; தண் பொருந்திய தன்மையால்தான் இது தண் பொருநை என்று பெயர் பெறுவதாயிற்று தண் பொருநைதான் தாமிர பாணி என்று பிறமொழியாளரால் திரித்து வழங்கப்பெற்றது. இதிலிருந்து தாமிரம கலந்திருக்கும நீரையுடையது என்று சிலர் பொருள் கூறவும நம்பவும் தலைப்பட்டனர். 'ஒத்தைக்கல் மந்து' என்பது ஆங்கிலேயரால 'ஒட்டகமண்டு' என்று மருவி வழங்கப் பெற்றபின் 'உதகமண்டலம' என அதனைச் சிலர் அறியாது வழங்கத் தொடங்கியதோடு நில்லாமல உதகம்—பனி, பனிமண்டிலம என்று தம அறியாமைக்கு ஒரு பொருள் கூறவும தொடங்கி யிருப்பதுபோன்ற வழக்கே தாமிரபர்ணி என்பதுவுமாம

பொருநையாறு இம் மலைமிசைத் தோன்றிக் கீழ்நோக்கி ஓடிவருகிறது. இதுதோன்றும இடம சதுப்பு நிலமாக எப் போதும் தண்ணீர் ஊறிக்கொண்டே இருக்கிறது இது சிறிது தூரம வந்தவுடன் கன்னிகட்டி என்ற ஓரிடம் இருக்கிறது. அவ்விடம மரஞ்செறிவுள்ளதாய்ப் பேரழகினதாய் விளங்குகின்றது இங்கே தங்கிடம ஒன்றிருக்கிறது அதிலிருந்து சிறிது தூரம இஃது ஓடிவந்து வாணதீர்த்தம என்னும் இடத்திலே மிக்க உயரத்திலிருந்து அருவியாக விழுகிறது. வாணன் முழுகி அருள்பெற்ற தீர்த்தம இது என அறிஞர் கூறுகின்றனர் சிலர் இது வானத்திலிருந்து விழுவதுபோல் மிக உயரத்திலிருந்து விழுவதினாலேயே வான தீர்த்தம என்று பெயர் பெற்றதெனக் கூறுகின்றனர் உடலைப்பற்றிய அழுக்கையும் தகையையும் தீர்த்துவைப்பதுபோலவே உயிரைப்பற்றிய பாவத்தையும தீர்த்துவைப்பது தீர்த்தம. ஆதலின் அவ்வருவியிலே நீராடுவதற்கு ஆடிமாதத்தில் வரும் இருள்மதியன்று ஆண்டுதோறும் மக்கள் பலர் பல இடங்களிலிருந்தும் பெருங்கூட்டமாக இங்கே வருகின்றனர். மலையடியிலிருந்து ஏறிப் பல மலைகளைத்தாண்டி இங்கே வந்து நீராடுவதன அருமைபற்றி "வாணனைக் கொடுத்து வாணதீர்த்தம் ஆடி" என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று.

இதற்குச் சிறிது கீழே கட்டளைமலை என்னும் இடம் இருக்கிறது. இமமலைப் பகுதி பண்டு பாவநாசருடைய பூசனைக்குக்

கட்டளையாக அமைந்திருந்தமையின் இப்பெயர் பெற்றது. இவ்விடத்தில் காரியாறு என்பது தண்பொருநையுடன் கலக்கிறது இங்கே ஒரு பெரிய ஆழம் நீலகண்டன் கசம் எனப்பெயர் பெறும். இங்கே இப்போது பெரிய அணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது, அதனால் கட்டளைமலையின் ஒரு பகுதியும் காரியாறும் இந்த அணையிற்கட்டும் நீரில் மூழ்கிவிடுகின்றன இவ்வணை ஏற்படுமுன் கட்டளைமலைத் தோப்பில் பல அருமையான பழங்களைத் தின்றுகொண்டு நண்பருடன் அளவளாவி வாண தீர்த்தத்தை நோக்குவார் உள்ளம் அடையும் இன்பத்திற்கு ஓர் எல்லையும் உண்டோ? காரியாறு நஞ்சாறு, அதில் கோடையில் நீர் குடித்தவர் கொடுமையான காய்ச்சல் பெற்றுத் துன்புறுவர்

இதற்குக் கீழே சேர்வையாறு என்னும் சிற்றாறு பொருநையில் வந்து சேர்கிறது. இரண்டாறுகள் முண்டுந்துறை யாதலின் அக்கூடிடம் முண்டந்துறை எனப் பெயர் பெறும். இவ்விடத்தில் ஒரு பெரிய தங்கிடமும் மலைக்காவலர் குடியிருக்கும் வீடுகளும் இருக்கின்றன இவ்விடத்திலுள்ள ஆழத்தில் முதலைகள் பல உள்ளன இங்குள்ள தோணியில் ஏறி உகைத்து மகிழ்வுடன் இன்னிசைபாடி இன்புறலாம். பொருநைப்பேராறு பின்னும் கீழ்நோக்கி வந்து கலியாணி தீர்த்தம் என்னும் இடத்தில் அருவியாக விழுகிறது அகத்தியனார் பெருமானுடைய கலியாணக் காட்சியைக் கண்டு பணிந்து அருள்பெற்ற இடம் இத்தீர்த்தக்கரை யாதலினாலேதான் இவ்விடம் இப்பெயர் பெற்றது போலும்! இவ்வருவியில் நீராடுவது கடினம் ஏனெனில் இது மிகவும் சிக்கலான இடத்திலே முந்நூறடி உயரத்திற்கு மேலிருந்து விழுகிறது இதற்குச் சிறிது கீழே வந்தபோதும் ஆறு பழைய பாவநாசம் என்னும் இடத்தில் அருவியாக விழுகிறது. இவ்வருவியிலே தலையைக்கொடுத்து முழுகுவது இன்பந்தருவதாகும் இங்கிருந்து சிறிது தூரம் சென்றவுடன் ஆறு மலையிலிருந்து நிலத்தில் இறங்குகிறது. இவ்விடம்தான் பாவநாசம் எனப் பெயர் பெறும். இவ்விடத்திலேதான் முக்களாலிங்கர் கோவில் இருக்கிறது. முக்களாலிங்கரே நம் பாவநாசப் பெருமான். கோவிலின் வாயிலில் அமைந்துள்ள மண்டபத்திலே முழுமதி நாளன்று இருந்துகொண்டு கிழக்கே அதனடியில் இருக்கும் யாற்றை நோக்கின், புலனாகும் இயற்கைப் பேரழகு எடுத்தியம்ப முடியாத மேன்மையுடையது.

(தொடரும்)

மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்கள்
பிரிவுக்கு இரங்கிக் கூறிய

# கையறுநிலைப் பாக்கள்

[மதுரைத் தமிழ்ப்பேராசிரியர் திரு ஆ. கார்மேகக் கோனார்]

*தமிழ்மொழியின் அமிழ்தென்னும் தாவில்சிலம் பின்சுவையும்*
*இமிழ்திரைசூழ் வரைப்பிலிணை யிலாதகம்பன் கவிச்சுவையும்*
*அமைதரவே புலவோர்க்கின் களித்தகதி ரேசவண்ணல்!*
*இமையவர்க்கும் அச்சுவையை எடுத்தளிக்கச் சென்றனையோ* (1)

*ஓதுவா ருளங்கரைத்தே உற்றபெரும் மலங்கெடுக்கும்*
*போதமார் வாசகத்தின் பொருளெல்லாம் புகன்றுநன்கு*
*ஏதமிலாப் பேரவையை யின்புறுத்தும் கதிரேசா!*
*கேதமார் உளத்தோடும் கேளிரைய நீத்தனையே!* (2)

*வடமொழியும் தென்மொழியும் வடித்துணர்ந்து வடமொழியின்*
*திடமுள்ள காப்பியச்சுவைக்குச் செந்தமிழ்க்காப் பியச்சுவைதான்*
*எடையிலிம்மி யுங்குறையா தென்றிறுத்துக் காட்டிஅவை*
*அடல்பெறும்எம் கதிரேசா! அகன்றனையே! அகன்றனையே!* (3)

வேறு

*கவியியற்றல் உரைகாண்டல் கட்டுரைகள் வரைதலவை*
*களிக்கும் வண்ணம்*
*நவையிலருஞ் சொற்பொழிவு புரிதல்மொழி பெயர்த்தலிவை*
*நன்கு சேர்ந்த*
*உவமையிலாப் பெரும்புலமை உன்போலுற் றார்களெவர்*
*உற்றார் யாரும்*
*அவலமிகக் கதிரேச! அண்ணல்! நீ அகன்றனையீ*
*தளிய தாமோ!* (4)

**குறிப்பு**:—(1) *தாவு இல - குற்றமில்லாத. சிலம்பு - சிலப்பதிகாரம். இமிழ்திரை - ஒலிக்கும் அலைகளையுடைய கடல். வரைப்பு - உலகம்.* (2) *கேதம் - துன்பம். வாசகம் - திருவாசகம்.* (3) *எடையில் - நிறுவையில். இமியும் - இம்மியும்; மிகச் சிறிய அளவு. அவை - வாத சபை. அடல் - வெற்றி.*

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி

# புலவர் மாணவர் தேர்வு

இச்சங்கத்தார் ஆண்டுதோறும் "புலவர் மாணவர் தேர்வு நடத்தித் தேர்ச்சியுற்றவர்கட்குத் தகுதித்தாள்களும் முதற் றகுதியில் முதன் மூவர்கட்குப் பரிசுகளும் வழங்கி வருகின்றார்கள்.

1954 பிப்ரவரியீ 22 (மாசியீ 11) திங்கட்கிழமை முதல் ஆறுநாட்களும் அத்தேர்வு சென்னை மாநிலத்திலுள்ள வித்துவான் கல்லூரிகளெல்லாம வழக்கம்போல நடைபெறும்.

சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டத் தேர்வுக்கும் அதன முற்பகுதிகளாகிய வித்துவான் முதனிலை, வித்துவான் புகுமுகவகுப்புக்கும் விண்ணப்பித்தெழுதும் தனிப்பட்ட மாணவர்களும மேற்குறித்த கலலூரிக் கட்டிடத்தில் எழுதித் தேர்ச்சியுறலாம்

வித்துவான் இறுதிநிலைக்கு ரூ. 3,-ம் வித்துவான் முதனிலைக்கு ரூ 2,-ம் புகுமுக வகுப்புக்கு ரூ. 1ம் கட்டணங்களாம்.

விண்ணப்பங்கள் வெற்றுத்தாள்களில எழுதிக் கட்டணத்துடன் 1953 டிசம்பரீ 20உக்குள் திருநெல்வேலிக் கீழைத் தேர்த்தெரு 24-ந தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மேலாளர் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். பிறகு குறிப்புகட்கு நேரில் எழுதவும்.

தெ த சங்கம்
நெல்லை

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர் குழுத்தலைவர்.

# செய்திகளும், குறிப்புக்களும்

**கரந்தைக் கவியரசு பிரிவு**

தமிழ்ப் பேரறிஞர், கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கள் 6-12-53-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1-30 மணிக்கு இறைவன் திருவடிப்பேறெய்தினார்கள். அவர்கள் பிரிவு, தமிழுலகுக்கும் அறிஞருலகுக்கும் ஆற்றொணா வருத்தந்தருவதாகும்.

அவர்கள், பனெடுங்காலம் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் ஆசிரியராக அமர்ந்து தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார்கள். பல உரைநடை நூல்களும், சிறந்த தமிழ்ப் பாக்களும் யாத்துள்ளார்கள். இவர்கள் வரலாறு, அடுத்த செல்வி இதழில் வெளிவரும்.

இவர்கள் பிரிவு குறித்து வருந்தும் அன்னார் குடும்பத்தார்க்கு ஆறுதலுடன், எம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

—ஆசிரியர்.

*விருதைத் தமிழ்க் கழகத் தீர்மானம்*

26-9-1953 தி. வ. ஆண்டு 1984 புரட்டாசி 10-ம் நாள் சனிக்கிழமை பிற்பகல் கூடிய விருதைத் தமிழ்க்கழகப் பேரவைக் கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

**தீர்மானங்கள்**

எண் (6) அ. 'ஔவையார்' என்ற திரைப்படத்தை "ஏழாண்டுகள் முயன்று ஔவையார் வரலாற்றைத் திரைப்படமாக எடுத்திருக்கின்றோம்" என்று கூறி நடத்துகிறார்கள். ஆனால் அப்படத்தில் சிறந்த வரலாறுகள் மறைக்கப்பட்டும், இல்லாதன பல புகுத்தப்பட்டும், கால மாறுபாடுகள் பல காட்டப்பட்டும், **குறிப்பாக வள்ளுவப் பெருந்தகையை இழிவு படுத்தியும்**, பல முரண்பாடுகள் சேர்க்கப்பட்டும் காட்டப்படுவதால் இக்கழகம் அவற்றிற்காக மிகவும் வருந்துவதுடன் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆ. இனிமேல் வெளிவரும் திரைப்படங்களில் இலக்கியத்திற்கும் வரலாற்றுக்கும் மாறுபாடான நிகழ்ச்சிகள் வராதவண்ணம் தடுக்க வேண்டுமென்று அரசியலாரை வேண்டிக்கொள்கின்றது.

இ. அதனோடு தமிழறிஞர்களும் இத்தகைய நிகழ்ச்சிகளில் விழிப்புடனிருத்தல் வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கின்றது.

எண் (7) **ஆந்திர மாகாணம் பிரிந்துவிட்டதனால் இனி, தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்றும் தமிழ் மாகாணத்தை அமைக்கவேண்டுமென்றும் அரசியலாரை வேண்டிக்கொள்கின்றது**

குறிப்பு — மேற்கண்ட தீர்மானத்துக்கு நாடெல்லாம் ஆதரவளித்துத் தமிழ்மொழிக்கும், வரலாற்றுண்மைக்கும் ஆக்கமளிக்க வேண்டுவது முதற்பெருங் கடமை.

—**ஆசிரியர்.**

---

# மதிப்புரை

*இராமநாதபுர மாவட்டக் கழகச் சாதனைகள்*

இவ்வறிக்கைநூல் இராமநாதபுரம் மாவட்டக் கழகம் (ஜில்லா போர்டு) 1949 முதல் 1953 வரை அவ்வட்டத்திற் செய்த அரும்பெரும் பணிகளின் விரிவை விளக்குவதாகும்.

இக் கழகத்தில் பல அறிஞர்களும், செல்வர்களும் தலைவராக அமர்ந்து தொண்டாற்றியுள்ளனர், அண்மையில் தலைவராக அமர்ந்து பணியாற்றியவர்கள், பாகனேரி உயர்திரு சி. உ. சுப. உடையப்பர் அவர்கள். இவர்கள் தம் காலம் முழுதும் நாட்டுத் தொண்டொன்றே குறிக்கோளாகக்கொண்டு பணிபுரிந்துவருபவர்கள். இவர்கள், காங்கிரசுப் பேரவையின் உறுப்பினராகப் பன்னெடுங்காலம் இருந்து நாட்டுக்கு நலஞ்செய்துவருபவர்கள் இவர்கள் தொண்டின் நலனை உணர்ந்த மக்கள் இராமநாதபுரம் மாவட்டக் கழகத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அப்பதவியையேற்று உடையப்பர் அவர்கள் 27-9-49 முதல் 30-6-53 வரை இருந்து தொண்டாற்றியுள்ளார்கள். அத்தொண்டின் விளக்கமே இவ்வறிக்கை.

இவ்வறிக்கையில் சாலை வேலைகள், கல்வி, மருத்துவ சாதனங்கள் என மூன்று பிரிவினுள் தொண்டுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன இறுதியில் அதன் வரவு செலவு கணக்குகளும் கொடுக்கப்பெற்றுள்ளன.

இந்தக் கழகம் ஆட்சிபுரிந்த காலத்தில் 52 மைல் 7 பாலாங்குள்ள 7 சாலைகளை அகலப்படுத்தியும், 192 மைல் 1 பாலாங்குள்ள 44 சாலைகளில் கல் பரப்பியும், 25 மைல் 6 பாலாங்குள்ள 3 சாலைகளுக்குச் சரள் (Gravel) பரப்பியும் உள்ளது அரசினர் முழுவுதவிபெற்று பெரும் பாலங்கள் 4-ம் சிறு பாலங்கள் 9-ம் கட்டியது 48 மைல் 4 பாலாங்குள்ள 9 சாலைகளுக்குக் கல் பரப்பியது.

இக்கழக ஆட்சிக்கீழ் துவக்கப்பள்ளிகள் 509-ம் உயர்தரத் துவக்கப் பள்ளிகள் 41-ம் நடுநிலைப் பள்ளிகள் 4-ம் உயர்நிலைப் பள்ளிகள் 15-ம் இருக்கின்றன. 37 பெரிய மருத்துவ நிலையங்களும், 31 கிராம மருத்துவ நிலையங்களும் இருக்கின்றன 1949-ல் இக்கழகம் ஆட்சி ஏற்குங்கால மூடிக்கிடந்த 18 கிராம மருத்துவ நிலையங்களை மீண்டும் திறந்து நடத்தியது குறிக்கத்தக்கது.

நோயாளர் தங்கி நோய்நணிக்கை பெறத்தக்க மருத்துவ நிலையம் ஒன்றைப் பரமக்குடியில் பெண்களுக்கெனத் தனியாக 12-10-51 முதல் தொடங்கியுளது. சேத்தூரில் 22-1-51 முதல் ஓர் மருத்துவ நிலையம் அமைத்து நடக்கின்றது சிவகங்கையில் உள்ள கழகப் பெண்கள் குழந்தை மருத்துவ நிலையத்தின் காம்பவுண்டில் பொதுநலக் கழகத்தார் கட்டித்தந்த மகப்பேறில்லம் ஒன்றை 27-2-53 முதல் துவங்கிச் செயலாற்றிவருகின்றது. இன்னும் இதன் தன்னலமற்ற பணிகள் பல

இப்பணிகளைத் தலைவராக அமர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்று நடத்தி வந்த உயர்திரு. உடையப்பர் அவர்களின் பயன்கருதாத்தொண்டு பெரிதும் பாராட்டற்குரியது. ஆட்சிப்பீடத்தில் அமருவோர் தந்நலங்கருதாதவராய், இவர்கள்போல் நாட்டு ஆக்கம் கருதுபவராய் அமைதல்வேண்டும். அறிவறிந்த காலமுதல் நாட்டு நலங்கருதி உழைப்பதில் நாட்டங்கொண்ட நல்லார் உடையப்பர் அவர்கள் நலலுளப்பாங்கினால் வையையாற்றின் ‘உடையப்பர் பால’மும், பேரையூர்ப் பாலமும், முடங்கியாற்றுப் பாலமும் நடராசபுரம் ‘முத்து உல உலகப்ப செட்டியார்’ பாலமும் புதுவனவாக உருவாயின. பள்ளிக் கட்டிடங்கள் பலவும் எழுந்தன அவர்கள் பிறந்த ஊராகிய பாகனேரியில், உ இரு. மு முத்தையா அம்பலம் அவர்கள் பெயரால் உயர்நிலைப் பள்ளியும் உண்டாயது.

இத்தகைய அருமபணிகளை இனிவரும் ஆட்சிப்பொறுப்புத் தலைவர்கட்கு வழிகாட்டிய உடையப்பர் அவர்களின் கைம்மாறு வேண்டாக் கடப்பாடு நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்ததெனப் பாராட்டி மகிழ்கின்றோம்.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.